223475

# கிராமாநுகூலன்

JL
1/31 M N27
N29.2.13
223475

உ

ரிஜிஸ்டர் நெ. M 1930] வந்தேமாதரம். [வருட சந்தா ரூ. 2—0—0

# கிராமானுகூலன்

(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்" பாரதி

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே." (ஔவை)

புத்தகம் 2 | சுக்கிலவருஷ சித்திரைமீ | ஸஞ்சிகை 10

28 JUN 1929

## கூட்டுறவு வெள்ளி ஜுபிலி.

இந்தியாவில் கூட்டுறவு முறையை ஏற்படுத்த 1904ம் வருஷத்தில் ஓர் சட்டம் இந்தியாவின்கண் கலை திறந்து விட்ட லார்டு கர்ஸன் ராஜப் பிரதிநிதியாயிருந்த காலத்தில் ஏற்படுத்தப் பட்டது. அதன் 25வது வருஷ பூர்த்தியை இவ்வாண்டு (வெள்ளிஜுபிலி) இந்தியாவெங்கும் விசேஷமாக கொண்டாடப்பட்டது. கூட்டுறவு முறையானது இந்த 25-வருஷகாலமாக வளர்ந்து செல்வதற்கு சமமாகவே நடந்து வந்திருக்கிறது. வேகமாகவும் உற்சாகத்துடனும் அபிவிர்த்தியடைய ஆரம்பித்த காலத்தில் முட்டுக்கட்டை போடாமலிருந்திருந்தால் இந்த வெள்ளிஜுபிளியின் வைபவத்தை கொண்டாடும் விதம் வேறுவிதமாயிருக்கக்கூடும். ஆனாலும் இந்தியா அதிக முன்னேற்றமடைந்துவிட்டால் சுயநலங்கருதி உழைப்பவர்களுக்கு இடமில்லாமற் போய்விடுமென்ற கவலை உதிக்கலாயிற்று. அதற்கு தகுந்த பரிகாரங்கள் தேடலானார்கள். நிர்வாகத் தலைமைக்கு ஐ. ஸி. எஸ் வர்க்கத்தாரை நியமித்தார்கள். உத்தியோகப் பற்றற்றவர்களின் உற்சாகம் குறைந்தது. வேகம் தணிந்தது. ஆனாலும் இயக்கத்தின் தன்மை மேன்மையுடைத்தான படியால் சிறிது நன்மை பயக்கக் கொண்டே வந்திருக்கிறது. இப்பொழுது இந்தியாவில் 70000-சங்கங்கள் இருபத்தைந்து லக்ஷம் மெம்பர்களுடையதாய் 25-கோடி-ரூ மூலதனத்துடன் வேலைசெய்து வருகிறது. இதைப்போல் பல மடங்கு உயர்வடைந்திருக்க வேண்டும். இதனால் ஏற்பட்டிருக்கும் நன்மைகளை உணர்ந்த ராயல் விவசாய கமிஷன் தங்கள் யாதாஸ்தில் "விவசாயிகள் வழக்கமாய் கொடும் வட்டிவாங்கும் லேவாதேவிக் காரர்களிடம் சிக்கி பொருமையுடன் நீண்டகாலமாய் அனுபவித்து வரும் கஷ்டங்களை நிவர்த்திக்க நியாயமான வட்டிக்கு கிடைக்கும்படியாக, இன்னும் அனேக சங்கங்களை ஏற்படுத்தி ஏராள மூலதனத்துடன் சரிவர வேலை செய்து வந்தால் விசேஷ நன்மையுண்டாகும். ஐக்கிய நாணய விஷயம் சிறிது விருத்தியடைந்திருக்கிறது. சிக்கனம் உண்டாயிருக்கிறது. பாங்கு முறைகளிலும் பணவரவு செலவில் கவனிக்க வேண்டிய பிரதம விஷயங்களிலும் தேர்ச்சியுண்டாயிருக்கிறது. எந்த இடத்தில் ஐக்கிய நாணயச்சங்கங்கள் நன்றாக வேலை செய்து வந்திருக்கிறதோ அந்த இடங்களிலெல்லாம் லேவாதேவிக் காரர்களால் வட்டி விகிதம் குறைக்கப்பட்டுவிட்டது. கடன் வாங்கியவர்கள் பேரில் அவர்களுக்கிருந்த செல்வாக்கும் குறைந்துவிட்டது இந்த விதமாக குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஜனங்களிடம் காணப்படுகிறது" என்று கூறியிருக்கிறார்கள். இதனால் இந்த இயக்கமானது நல்ல பலனை உண்டாக்கியிருக்கிறதென்பது திண்ணம். இந்த இயக்கத்திற்கு சரியான உதவியளித்து உத்தியோகப் பற்றற்றவர்களுக்கு தகுந்த வசதிகள் கொடுத்து சரியானபடி சோதனை ஏற்பாடுகளும்செய்து நன்றாக நிருவகித்துவந்து இந்தியாமுழுவதும கிராமங்கள் தவறாமல் சங்கங்கள் ஏற்படும்படி செய்து ஐக்கிய நாணயச்சங்கங்களினால் ஏற்படும் நன்மைகளையும் நோக்கங்களையும் போதித்து வந்தால் இந்தியா கூடிய சீக்கிரத்தில் பொருளாதார நிலைமையில் நன்னிலைமை அடையுமென்பது திண்ணம். ராஜ்ய கவர்ண்மெண்டார் கவனிப்பார்களாக

—

# சீகாழி ஜமாபந்தி தடபுடல்.

சீர்காழிதாலுகா ஜமாபந்தி எப்ரல்மீ 15உ மாயவரம் டிவிஷனுபீஸர் ஸ்ரீமான் G. மாசிலாமணி பிள்ளையால் ஆரம்பிக்கப் பட்டது. காலை 8-மணி முதல் 12 மணிவரையில் ஜமாபந்தியும் மத்தியானம் கேஸ் விசாரணையும் மாலை 6 மணி முதல் 9 மணிவரையில் ஜமாபந்தியும் நடத்தினார் இப்படி நடத்தியும் 4 தினங்கள் வரையில் ஒரு வட்டம் கூட முடியவில்லையாம் கி. உ. க்களின் கஷ்டம் சகிக்கக்கூடாத தாகிவிட்டது 4 மணி சாவகாசம் நின்று கொண்டிருந்தும் வேலை முடிந்தபாட்டைக் காணோம் என்று கதறலானார்கள் கிராமானுகூலன்பத்திராதிபர் ஸ்ரீமான் N. ஆபத்ஸகாயஐயரும் விஜயஞ்செய்து பார்த்தார் உடனே தினசரி பத்திரிகைகளுக்குத் தந்திமூலமாக அறிவிக்கப்பட்டது. மருநாள் பத்திரிகையில் பார்த்தவுடனே சிறிது துரிதப்படலாயிற்று. 2 தினங்களில் சில வட்டங்கள் சல்லிசாக முடிந்தன. மருபடியும் சிறிது கடுமை காட்டப்பட்டதால் 25உக்குள் 83வட்டங்கள் முடிய வேண்டியிருக்க அன்றேடு சுமார் 40 வட்டங்கள்தான் முடிந்தன சரிபாதிக்கு மேல் பாக்கி தங்கிவிட்டன டிவிஷனுபீஸரும் திருநெல்வேலிலாண்டு அக்ரிசேஷன் ஆபீஸராக மாற்றப்பட்டு விட்டார் கிராம உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் சேர்ந்து ரூ 100 வரை சிலவுசெய்து ஸ்ரீ ஆபத்ஸகாய பிள்ளையார் ஸ்ரீருணம் தீர்த்த பிள்ளையார் ஸ்ரீ பால சுப்ரமணியர் ஸ்ரீ அங்காளம்மன் முதலிய சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேகங்கள் செய்து கொண்டாடினார்கள் நமது கிராமானுகூலன் பத்திரிகைக்கும் 50 பேர்களுக்குமேல் புதிதாக சந்தாதாரராக சேர்ந்து ஆதரிக்கலானார்கள் இந்தமாதிரி ஜமாபந்தி நடந்து சுமார் 30 வருஷங்களுக்கு மேலாகிவிட்டதென்றும் இவ்வளவு கஷ்டமூம்பணச்சிலவும் ஏற்பட்டதில்லை யென்றும் கூறப்படுகிறது ஜமாபந்தி அலவுன்ஸானது வெட்டித்தலையாரிகளுக்குமட்டில் ஜமாபந்தி ஆபீஸர் முன்னிலையில் கொடுக்கப்படுகிறது சுமார் ரூ 50 வரையில் செலவாகும் கர்ணங்களுக்கு படி கிடையாதாம் என்னே ரெவினியூ டிபார்ட்மெண்டாரின் நிர்வாகத்திறமை ஜமாபந்திக்கு ஜமாபந்தி படி விஷயமாய் மனுகொடுத்தும் மீட்டிங்குக்கு மீட்டிங் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியிருந்தும் படி விஷயமாய் யாதொரு புகாரும்தலைக்கு எட்டவில்லை யென்று சட்டசபையில் கூசாது ரெவினியூ மெம்பர் கனம் மார்ஷ் பாங்ஸ் பதில் கூறுகிறார் அவர் என்னசெய்வார் பாவம் கவர்னர் வேலைக்கு எட்டி எட்டி மேலே பார்த்துக்கொண்டிருக்கிறவருக்கு கீழே நடக்கும் சங்கதிகள் தெரியவில்லைபோலும் கனம் மார்ஷ் பாங் உள்ள வரையில் கிராம உத்தியோகஸ்தர்களின் கஷ்டம் நிவர்த்தி யாகாதோ வென்று நினைக்க வேண்டியிருக்கிறது ஜமாபந்தியை அடியுடன் ஒழித்துவிட வேண்டியது அவசியமாகும் அதைப்பற்றி ஒரு கமிட்டி நியமித்து விசாரணை செய்து முடிக்கவேண்டுமென்று கோருகிறோம்

## திருவிடைமருதூர் மஹாகும்பாபிஷேகம்.

திருவிடைமருதூர் அம்மன்கோவில் ஸ்தூபி விழுந்து போயிருந்ததை புதுப்பித்து தங்க ஸ்தூபியாகவைத்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் திருவாவடுதுறை ஆதீனம் மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ வைத்திலிங்கதேசிக பண்டாரசந்நிதி அவர்களால் மிகசிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது. ஸ்தூபி வைப்பதுதானே என்று சாதாரணமாய்க் கருதாமல் திருப்பணிசெய்து மகா கும்பாபிஷேகம் நடத்துவது போலவே சகலவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது யாகசாலையின் அமைப்பும் வளைவுக்கு வளைவு பக்தி விளைவிக்கும் செய்யுள்களும் கண்ணைக்கவரத் தக்கதாயிருந்தது. குறித்த லக்கினத்தில் மகா கும்பாபிஷேகம் நடந்தேறியது. ராத்திரி பஞ்சமூர்த்திகளும் ரிஷபவாகனத்தில் எழுந்தருளிய காக்ஷியும்வாணவேடிக்கைகளும் மிகச்சிறப்புற்று விளங்கின. எந்த காரியத்தையும் நேரில் கவனித்து மிகச்சிறப்பாக நடத்தி வைப்பதில் மிகுந்த சிறத்தையுள்ள மகா. சன்னிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ வைத்திலிங்கதேசிக பண்டார சந்நிதி அவர்கள் நீடூழி வாழ்க.



223475

# நன் கொடைகள்.

நமது கிராமானுகூலன் பத்திரிகைக்கு அடியிற்கண்ட கனவான்கள் அன்புடன் நன்கொடைகள் அளித்திருப்பதை வந்தனத்துடன் ஏற்றுக் கொண்டோம்

ஸ்ரீமான் P. தியாகராஜ காடவராயர் அவர்கள் யூனியன் போர்டு பிரசிடெண்டு அய்யம்பேட்டை ரூ 25
,, N. D. லெக்ஷ்மிநாராயண ஐயர் அவர்கள் M. A. B. L திருச்சி ,, 10
,, S செல்வநாயகம் பிள்ளை அவர்கள் கி. மு. வரகேரி. ,, 10
,, அப்பாத்துரை உடையார் அவர்கள் கி. மு. செம்மங்குடி. ,, 10
உச்சிக்கட்டளை கிருமசமுதாயம்
,, R. கிருஷ்ணஸாமி படையாச்சியார் அவர்கள்.
,, சிதம்பர படையாச்சியார் அவர்கள் 5
,, R. தங்கமுத்து இடங்காபுரந்தார் அவர்கள் கி. மு. சேஷப்பாடி 10
,, சிவசங்கர உடையார் அவர்கள் கி. மு. பூனுபிருப்பு. 15
,, K. S. காசிநாதய்யர் அவர்கள் தாலுகா போர்டு மெம்பர் 10
,, N. திருவேங்கடத்தய்யங்காரவர்கள் B. A, B. L முனிசிபல் சேர்மன் கும்பகோணம் 10
மெஸர்ஸ் A. R R. & V. R. S. Firm 10
,, G. வையத்யூசப் சாகிப் பகதூர் அவர்கள் கிராம முன்சீப் தாண்டவங்குளம் சீகாழி. 15

அன்பர்கள் தயவு செய்து சந்தாத்துகைகளை உடனே அனுப்பவேணுமாயும் தங்களாலியன்ற நன் கொடையளித்து பத்திரிகையை ஆதரித்து வரவேணுமாயும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

### சட்ட சபை எலக்ஷன்

இந்தியா சட்ட சபைக்கு தஞ்சை திருச்சிஜில்லா தொகுதியின் அபேக்ஷகராக கும்பகோணம் ஸ்ரீமான் ராவ்சாகிப் C. R. லெக்ஷிமிவாரக அய்யங்கார் அவர்கள் நிற்பதாக அறிவிக்கிறார்.

### பேணுங்குடி மகா கும்பாபிஷேகம்.

தஞ்சை ஜில்லாவின் உண்மைப்பிரதிநிதியாயும் சுயநலம் என்பது சிறிதும் கருதாதவராயும் பரோபகாரமே பெரிதாகக் கொண்டவருமான ஸ்ரீமான் மருதவாணம்பிள்ளை அவர்கள் தங்கள் கிராமத்திலுள்ள ஸ்ரீபிரத்தியக்ஷ நாயகி சமேத ஸ்ரீ நாகநாதஸ்வாமி கோயிலை சுமார் லக்ஷ ரூபாய் வரையில் செலவழித்து அடியுடன் புதுப்பித்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்தை 29-3-29ல் குறித்தலக்கினத்தில்தவறாது நடத்தி வைத்தார்கள். அச்சிற்றூர் பேரூராக விளங்கியது யாகசாலையின் அமைப்பு விசேஷமாயும் சாஸ்திரோக்தமாயும் அமைந்திருந்தது அன்னாருடைய மேன்மையான குணத்தைக்கருதி ஜில்லாவிலுள்ள பல பிரமுகர்களும் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். அவரவர்களுக்குத் தகுந்தபடி உபசாரணைகள் சிறப்பாகவும் அன்பாகவும் நடந்தன. அன்று ராத்திரி வெள்ளிரிஷபத்தில் சுவாமி எழுந்தருளிய காக்ஷி மிக அற்புதமாயிருந்தது வாணவேடிக்கைகளும் தீவிட்டி வெளிச்சமும் பகல் போல் விளங்கியது ராஜாக்களும் மடாதிபதிகளும் நாட்டுக்கோட்டை செட்டியார்களும்தான் பெரிய திருப்பணிகள் செய்து அதிக சிலவில் கும்பாபிஷேகங்களை நடத்தி வருகிறார்கள் அவைகளை விட ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் அன்புடனும்பக்தியுடனும் சொந்தபணத்திலிருந்து லக்ஷ ரூபாய் வரையில் திருப்பணிக்கும் 20000-ரூ வரையில் கும்பாபிஷேகத்திற்கும் சிலவழித்து நடத்திவைத்தகானது மிகவும் போற்றக் கூடியதாகும் அன்னார் நமது ஜில்லாவின் பிரதிநிதியாக என்றும் விளங்கி அநேக நன்மைகளைச் செய்யும்படியாக திடகாத்திரத்தையும் சகல சம்பத்தையும் அளித்தருள வேணுமாய் ஸ்ரீபிரத்தியக்ஷநாயகி சமேத ஸ்ரீநாகநாத ஸ்வாமியை பிரார்த்திக்கிறோம்.

### மண்ணியாறு பாசனம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க தம்பிரான் சுவாமி அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஓர் மகாநாடு கூடிற்று பிராசுதார்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தார்கள்.

மண்ணியாற்று தலப்பில் கட்டிடம் கட்டத் திட்டம் போட்டுபல வருஷங்களாகியும் வேலை ஆரம்பிக்கப்படாமலிருப்பதைப் பற்றி வருந்துவதாகவும் இந்த வருஷம் வெள்ளம்வருவதற்கு

முன் வேலையை முடித்துக் கொடுத்து விட வேண்டும் என்றும் காவிரியாறு மணப்போக்கியிலிருந்து வரும் ஜலத்திற்கு பாதகமுண்டாகாமலிருக்க வேண்டுமென்றும் ஓர் தீர்மானம் செய்யப்பட்டது. கெவர்ன்மெண்டாரிடம் டெபுடேஷன் போகவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது ஸ்ரீமான் ராவ்சாகிப் C. R. லெக்ஷ்மிவாசய்யங்கார் அவர்கள் விடாமுயற்சியுடன் இவ்விஷயத்தில் பாடுபட்டு வருகிறார் வக்கீலுபசாரத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது. அக்கிராசனம் வகித்த ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கதம்பிரான் சுவாமிகள் அவர்கள் பாசன விஷயத்தில் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சியை எல்லோரும் மிகவும் பாராட்டி போற்றினார்கள்.

## திருப்பனந்தாள் பிமோற்சவம்.

ஸ்ரீ அருணஜடேஸ்வர சுவாமியின் பிரமோற்சவம் தர்மபுரம் ஆதீன கர்த்தரவர்களால் இவ்வருஷம் மிகச்சிறப்பாக நடத்திவைக்கப்பட்டது. ஐந்தாம் திருநாள் ரிஷபவாகனகாக்ஷியும் அன்று தர்மபுரம் ஆதீனம் மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பண்டாரசந்நிதி அவர்கள் விஜயம் செய்திருந்ததும் விசேஷமாயிருந்தது 7-ம் திருநாள் திருக்கல்யாண மகோத்ஸவம் திருப்பனந்தாள் ஆதீனம் மண்டகப்படியாகையால் வழக்கம்போல் மிக விசேஷமாய் நடத்திவைக்கப்பட்டது. இரண்டு பல்லக்குகள் முத்தினாலும் புஷ்பத்தினாலும் அலங்கரிக்கப்பட்டு எலக்டிரிக் விளக்குகளும் போடப்பட்டிருந்தது. சுவாமி அம்மன் சாத்துபடி ஏராளமான நகைகளுடன் விசேஷ அலங்காரமாய் விளங்கியது. நாதமுனி பாணடும், நாகசுரமும் வாணவேடிக்கையும் சதுர்க்கச்சேரியும் கோலாட்டமும் ஏணியின் பேரில் கரகமாடியதும் ஜனங்களை பரவசப்படுத்தியது இவ்வைபவத்திற்கு உத்தியோகஸ்தர்களும்பிரபுகளும் விஜயம்செய்து சிறப்பித்தார்கள். எக்காரியத்தையும் மிகத்திறமையாயும் அன்போடும்பக்தியோடும் நடத்திவைக்கும் இளைய தம்பிரான் ஸ்ரீலஸ்ரீ சாமிநாததம்பிரான்சுவாமி அவர்களை எல்லோரும் பாராட்டினார்கள்.

## மன்னார்குடி. தாலூகாபோர்டு எலக்ஷன்

காங்கிரஸ் வாதியான ஸ்ரீமான் S. ரெங்கசாமி முதலியார் அவர்கள் மன்னார்குடி பிர்க்காவுக்கு மிகப் பெரும்பான்மையான வோட்டர்களால் மெம்பராக தேர்ந்தெடுக்கப்பட்டார் மிக்க தகுதியுள்ளவரே பொதுநலப் பிரியர் தேசாபிமானி.

## கி. உ. பரம்பரை பாத்திய மசோதா

ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயர் அவர்களை நமது பத்திராதிபர் பேட்டி கண்டு இம்மசோதா விஷயமாய் சிரத்தை எடுத்துக் கொள்ள வேணுமாய் வேண்டிக் கொண்டதின் பேரில் ஸ்ரீமான் ஐயரவர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் விஷயமாய் தாம் வேண்டியதைச் செய்வதாயும் மசோதாவை தாமே கொண்டு வருவதாயும் அதற்கு வேண்டிய தகவல்களை தமக்கு அனுப்பி வைக்கும்படியும் கூறினார்கள் தேசாபிமானமே பெரிதாகக் கொண்ட ஸ்ரீமான் ஐயரவர்கள் நீடூழிவாழ்க.

## சட்டசபையில் ஜமாபந்தி அலவுன்ஸ்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஜமாபந்தி அலவுன்ஸ் கொடுப்பதை நிறுத்தி விட்டதால் கெவர்ன்மெண்டுக்கு வருஷ வாரியில் எவ்வளவு மீதமாயிற்று கிராமஉத்தியோகஸ்தர்களிடமிருந்து மறுபடியும் ஜமாபந்தி அலவுன்ஸ் கொடுக்க வேணுமென்று வேண்டுகோள்கள் வந்ததா? இனியாவது அதை கொடுக்க கெவர்ன்மெண்டுக்கு உத்தேசமுண்டா என ஸ்ரீமான் ஏ. பி. ஷெட்டி கேட்டதற்கு ரெவினியூமெம்பர் 20,615 ரூபாய் மீதமானதாகவும் கி. உ. க்களிடமிருந்து வேண்டுகோள்கள் ஒன்றும் வரவில்லை யென்றும் திரும்பவும் நியமனம் செய்த விஷயத்தில் சரியான மீதம் ஏற்பட்டால் கெவர்ன்மெண்டார் இவ்விஷயத்தைப்பற்றி கவனிப்பார்கள் என்றும் கூறினார்.

## ஆதங்க நிக்ரஹ அவுஷதாலயம்,

இந்ஸ்தாபனம் 48-வருஷங்களுக்கு முன்னால் சிறிதாக ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது உலக முழுவதும் வியாபகமடைந்து பல இடங்களிலும் கிளைஸ்தாபனங்கள் ஏற்பட்டு அதன் வியாபாரம் மிகவும் செழித்தோங்கி வந்திருக்கிறது. அதன் வளர்ச்சியை காட்டக்கூடிய அழகிய சித்திரப் படங்கள் நிறைந்த புஸ்தகம் வரப்பெற்றோம் முயற்சியுடன் செய்யும் எக்காரியமும் சிறப்புறும் என்பதை நன்றாய் விளக்கி காட்டப்பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைப் பெருமைக்காக செய்யாமல் இனியும் வியாதியால் கஷ்டப்படும் மனிதர்களின் நன்மையின் பொருட்டு வெளியிட்டதாக கூறுவதை பாராட்டுகிறோம் இந்த அவுஷதாலயம் செழித்தோங்குக.



## நேரிசை ஆசிரியப்பா.

( தமிழ் மாணவன்.)

—x0x—

பொன்மகள் சொன்மகள் பொற்புற நடிக்கும்
பொன்னி வளஞ்சால் நன்னகர்க் குடந்தையில்
தோன்றியீ ராண்டாய்த் தான்றனிப் பொருள் பல
கொண்டினி தூர்ந்தே யெண்டிசைப் பரப்பினும்
'கிராமானு கூலக் கிழமையை நல்கிய
பாரானு கூல! நிராசையின் நண்ப!
நின்வர வேலார் தன்னல மிழத்தல்
சரதமென் றுரைப்பர் தக்கவர் முக்கால்
அதனா லுன்னை யகமகிழ்ந் தினிமேல்
புறக்கணித் திடாமற் போற்றுவ தன்றியும்
பற்பல கேயரை யற்புடன் கூட்டியும்
வேண்டிய வுதவி காண்டகப் புரிதல்
ஈண்டிய மேலோர் கடனெனப் புகன்று
தாண்டவ மாடுந் தம்பிரான் குஞ்சித
சரண கமலந் தலைக்கொளீஇ
வேண்டுதும் பன்முறை வாழிநீ யெனவே.

## கடிதம்.

—0—

அன்பார்ந்த பத்திராதிபர் அவர்களுக்கு:—

தாங்கள் அன்புடன் எனக்கு அனுப்பிய "கிராமானுகூலன்" பிப்ரவரி மாத சஞ்சிகையை வரப்பெற்றேன். கிராமாதிகாரிகளுடைய முன்னேற்றத்தைக் கருதியும், கிராமவாசிகளுடைய நன்மையைக்கருதியும் கிராமானுகூலன் வெளிவருவது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அறிவு உணர்ச்சியையும் தேசாபிமானத்தையும் ஊட்டத்தக்க பல கட்டுரைகள் கிராமானுகூலனில் காணப்படுகின்றன. கிராமவாசிகளுக்கு மிக்வும் உபயோகமான கிராம பரிபாலனம், கூட்டுறவு, முதலிய விஷயங்கள் தங்கள் பத்திரிகையில் காணப்படுகின்றன கிராமானுகூலன் தமிழ் நடையும் கிராமவாசிகளுக்கு எளிதில் விளங்கக் கூடியதாயிருக்கின்றது கிராமானுகூலனை பொதுவாக கிராமவாசிகளும், முக்கியமாக கிராம உத்தியோகஸ்தர்களும் ஆதரிக்கக் கடமைப்பட்டவர்கள். நான் கிராம உத்தியோகஸ்தர்களைப் பற்றி எழுதிய கடிதம் கிராமானுகூலன் பத்திரிகையில் வெளியாயிருப்பதைக்கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது கடிதத்தை பிரசுரம் செய்ததற்காக பத்திராதிபர் அவர்களுக்கு எனது வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தங்கள் பத்திரிகைக்கு சந்தாதார்களை சேர்த்துக்கொடுக்க என்னால் சாத்தியப்பட்டவரையில் முயற்சி செய்கின்றேன். நானும் கூடிய சீக்கிரம் எனது சந்தாதொகையை அனுப்பிக்கொள்ளுகிறேன். உயரிய லக்ஷியங்களுடன் உன்னத சேவை புரிய தோன்றியிருக்கும் "கிராமானுகூலன்" வளர்ந்தோங்கி நீடூழிவாழ வேணுமாய் எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன். கீழ்கண்ட விலாசத்துக்கு தங்கள் பத்திரிகை ஒன்றை அனுப்பக்கோருகிறேன். நானும் அவருக்கு எழுதி சந்தாதொகையை அனுப்பும்படி ஏற்பாடு செய்கிறேன்.

(ஸ்ரீமான் S. ராகவேந்திரராவ் காணசிங்கிபுரம்,)

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள.

K. S. லெக்ஷ்மண ராவ்,

கிராமமுன்சீப், கறகதஹள்ளி, சேலம் ஜில்லா.

## சமயங்களும் தற்கால நிலைமையும்.

(ஸ்ரீமான் K. சிவராமையர் எழுதுகிறார்.)

கடவுளின் உண்மையைப் பெரிதும் நம்பிய ஆஸ்தீகம் நிறைந்துள்ள நம்முடைய பாரததேயத்தில் தற்காலத்து நிலவிவரும் மதக்கோட்பாடுகளைச் சிறிது ஆராயின் நமதுநெஞ்சம் பன்முறை திடுக்கிடுகிறது. பண்டைக்காலத்துப் பெரியோரிருந்த நிலைமையும், அவருடைய அறிவும், ஆற்றலும், சீலமும, உயர்ந்த ஒழுக்கங்களுமே அன்னவரை மேன்மையுறச் செய்தன. மக்களுக்கு இன்றியமையா ஒழுக்கங்களை போதிக்கும் நூல்களைப் பெரிதும் அவர் பாராட்டிவந்தனர் பாராட்டிவந்ததுமன்றி அவ்வாறே ஒழுக்கத்தின்பாற்பட்டனர்.

இக்காலத்துச் சீர்குலைவுக்குக் காரணம் பலவுள. பெரும்பாலும் நோக்குமிடத்துப் பள்ளிக்கூடங்களில் உள்ள தற்கால கல்வியின் நிலைமையே பொதுவாக மக்களைக் கெடுத்து, அயனாட்டு நடையுடைகளையும் பற்றச் செய்து, நாகரிகம் என்னும் மாயவலையிலகப்படுத்துகிறது. ஒரு சிறுவன் ஒன்பது அல்லது பத்தாண்டுகள் ஆங்கிலம் பயின்றனில், உடனே முன்னம் அவன் பெற்றோர்கள் கற்பித்தபடி வந்த ஒழுகலாறுகளை அறவே மறந்து, புதிய முறைகளைக் கைபிடித்து, மேனாட்டாரைப்போல நடிக்கவும், பேசவும், உண்ணவும் தொடங்கிவிடுகிறான். பெற்றோர்களுமவனை அடக்குவதில்லை. பள்ளிக்கூடங்களிலும் போதுமான நற்போதனைகள் கிடைப்பா.

பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் கல்வியினால் வரும் கேடுகளையும் சிறிது ஆராய்வோம், சிறுவர்கள் சுத்தமான வுடைகளைத் தரித்துக் கொண்டு, நெற்றியில் அவ்வவர் மதாசாரப்படி குறிகளணிந்திருக்கின்றனரா வெனக் கேட்போரில்லை. அச்சிறுவர்கள் படிக்கும் புத்தகங்களிற் பெரும்பாலும் மதக்கோட்பாடுகளையும், ஒழுக்கங்களையும், புராணசரித்திரங்களையும் பற்றியமைத்திலர். நாயைப்பற்றியும், பூனையைப் பற்றியும், எலியைப் பற்றியும், மற்றும் எளிதில் சிறுவரறிந்த பொருள்களையே கூற, அவர்கள் ஒழுக்கங்கோடல் முதலிய குணங்களை பறவே மறந்து மாறான நிலைமையில் பழகி வருகிறார்கள் இக்காலத்தில் சென்னையிலும் பிற நகரங்களிலும் இத்தகைய சிறுவர்களைக் கணக்கின்றிக் காணலாகும். மயிர் கத்தரித்த தலையையும், குறிகளில்லா நெற்றியையும், வேண்டாவாறான உடைகளையுமுடைய அவர்களைக் காண அறிவையுடைய எவர்மனந்தான் திடுக்கிடாது.

பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் பயின்றாலும் அவ்வாங்கில புத்தகங்களில், இந்திய மன்னர்களைப்பற்றியும், வீரர்களைப்பற்றியும் இந்தியச்சான்றோரைப் பற்றியுமே கூறுவனவைகளாக அமைய வேண்டும். மேனாட்டுப் பெரியோர்களைப் பற்றிக் கூறும் சரித்திரங்களும் பண்புடையனவாயின் அமைதல் நன்றாகும் இவற்றுள் முன்னையதே பெரும்பாலும் இன்றியமையாதன. அறுபத்துமூன்று சிவனடியார்களைப் பற்றியும் பன்னிரண்டு ஆழ்வார்களைப்பற்றியும், வடநாட்டிலுள்ள சைவவைணவபக்தர்களைப்பற்றியுங்கூறும் புத்தகங்கள் ஆங்கிலத்தில் அமையின் சிறுவர்கள் பெரிதும் நமதுநாடு, மதம், ஒழுக்கம், பண்டைய மன்னர்களின்பெருமை, கவிவாணர்களின் அருமை முதலியனவற்றையறிந்து, நாகரீகமாயவலையிற்சிக்கியமிழமாட்டார்கள். இஃதன்றியும் தமிழ்புத்தகங்களும் அவ்வாற்றான் மைந்துகல்விபயில்வாராயின், பாலில் பழம் விழுந்தது போன்று, நமது சிறுவர்கள் அறிவாலும், ஒழுக்கத்தாலும் சிறப்படைவார்கள். சிறுவர்கள் சிறக்க மதமும் நாடும் வளம் பெறும். மேனாட்டு அறிஞர் பலருள்ளும் பண்டையோர் சிலர் நம் நாட்டுச்சீர்மையையும் மதப்பற்றையும், வாணாள் முறையையும் பெரிதும் பாராட்டியுள்ளார். ஆக நம் சிறுவர்கள் மேன்மைபெற யாவும் மேன்மை பெற்று, உலகத்தில் நமக்கு இணை நாமே யெனவும் எண்ணுமாறு செய்து, நம்மைக்கண்டு உலகத்தோர் பலரும், நம்மையே பின்றழுவுமாறும் விழுப்பமெய்தி உயர்ந்தோங்குங் காலமும் விரைவில் நண்ணுமென்பதற்கையமின்று.

இனிப் பொது மக்களும் இக்காலத்துப்பலதுர்போதனைகளாலும், நன்னிலையில் நில்லாமல் பலதிறப்பட்ட மாயத்துறைகளில் இறங்கித் தமக்கே சீர்கேட்டைத் தேடிக்கொள்ளுகிறார்கள். எக்காலத்தும் பொதுமக்கள் தங்களுடைய நன்மை



223475
சென்னை-600.008

தீமைகளைத் தாமே யறியமாட்டார்கள். இவர்களை நன்னிலையில் நிறுத்தும் கடமை அறிந்த சில பெரியோர்களதாகும் அப்பெரியோர் மடாதிபதிகளும், மதாசாரியர்களும், வயதும் அநுபவமும் முதிர்ந்த அறிஞர்களுமாவார். சமய உயர்ச்சிக்கும் அதன் வீழ்ச்சிக்கும் இவரே காரணமாவர். முதலாக மடங்களை யெடுத்துக்கொண்டு சிறிது ஆராய்வோம் பண்டைக்காலத்தில் மடங்களை யமைத்தது சமயம் வீழ்ச்சிபெறுங்காலத்து அச்சமயத்தை நிலைநிறுத்தவும், பிரசாரர் வாயிலாகப் பொது மக்களுக்கு அறிவுறுத்தவுமே யாகும். அவ்வாறிருக்க அன்னோர் தங்கள்செல்வங்களைப் பெட்டகங்களிலமைத்து, இன்றியமையாத நற்றுறைகளில் செலவிடாது வாளாகழிப்பர் இவ்வாறு செலவிடில் மடங்களுக்குரிய செல்வம் குறைவு படும் என எண்ணவேண்டாம். கடவுள் ஒருவர் இருக்கிறார் என மக்களறிந்து நல்வழிப்பட்டாற்றான் மடங்களும் நிலைபெறும். தற்காலத்தில் நிலவிவரும் நாத்திக போதனைகளால் மக்கள் மயங்கி மடங்களையும், ஆலயங்களையும் இடிக்கத் தலைப்படுங்காலத்தையும் விரைவில் காணலாகும். ஆகையால் மடாதிபதிகள் இதைமனதுட்கொண்டு முன்வரவேண்டும். இவ்வகை மடங்களை யொத்த மேனாட்டிலிருக்கும் (Mission) மிஷனாலயங்களின் செல்வமெல்லாம் மதவளர்ச்சிக்கே செலவு செய்வார்கள். செல்வங்குறைபடின் பிரபுக்கள் நன்கொடையாகச் செல்வத்தை வாரிவாரிக் கொடுப்பார்கள் அவ்வாறு நம் நாட்டிலும் அந்நெறியைக் கைக்கொண்டு ஒழுகல் வேண்டும் தமிழ்நாட்டுப் பிரபுக்களும் செல்வத்தினால் மடங்களை ஆதரிக்க வேண்டும். இஃதன்றியும் பொது மக்களில் அறிவுடையோர் பலரும் ஆங்காங்கு யாதொரு பொருளையும் இயன்றவரை உபகாரமாக எதிர்பாராது; பிரசாரர்களாக வமையவேண்டும். மக்களும் ஆங்காங்கு போதிக்கப்படுதல் வேண்டும்.

மதவளர்ச்சிக்கு வேண்டிய பல துறைகளிலும் பிரசாரர்கள் நிலவுங்காலத்துச் சமயபேதங்களைப் புகட்டி மக்களுக்குட் சண்டை சச்சரவுகளை நிலைநிறுத்தி நாட்டை இடர்ப்படுத்தலாகாது இஃது நம் நாட்டில் பெரியதோர் குறையாக விருந்து நம்மை விட்டு நீங்கா திருப்பதிலொன்று இக்குறை சிறிது சிறிதாக மறைந்து செல்லும் இக்காலத்தில் வேறொரு விபரீத உணர்ச்சியைத் தரும் சமயசச்சரவுகளைப் பற்றித்தூண்டிவிடாது அந்தந்த சமயங்களிலுள்ளவர் யாவரும் பிறமத வெறுப்பின்றித் தத்தம் சமயங்களின் உண்மையைப் போதித்து ஆத்திகத்தை நிலைநிறுத்தி நாத்திகக் கொள்கைகளை வேரறுக்க வேண்டும்.

கவனியுங்கள் ! கவனியுங்கள் !!

அநேக வைத்தியர்களும், ஹக்கீம்களும் எங்கள் ஔஷதங்களை வாங்கி சொந்த ஔஷதங்களைப்போல் வேறு நாமங்களைச் சூட்டி விற்பனை செய்து வருகிறார்கள்

சந்திரப்பிரபா மாத்திரைகள்.

தீவிரமான வெள்ளை, (வெட்டை) மூத்திர நாளங்களில் எரிச்சல், மூலம் நீர்ச்சுருக்கு இவைகட்கு பரம ஔஷதம்! ஸ்திரீ ரத்னங்களுடைய வியாதிகளுக்கு நிகரற்ற ஔஷதம்.

16-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ 1—0—0தான் !

கேட்போருக்கு காட்லாக் இனாம் ! உடனே எழுதுக !!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

நெ. 26, பிராட்வே, மதராஸ்.

## அம்பா சமுத்திரம் தாலூகா

### கி. உ. சங்கம்.

இச் சங்கமானது முதல் முதல் 10—12—1919-ல் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு வருஷம நடந்து அப்பால் நின்று விட்டது. அச் சங்கத்தை பழையபடி முறையே நடத்தவேண்டியதற்காக 29-3-29ல் மகாசபை மீட்டிங் அம்பாசமுத்திரத்தில் நடத்தப்பட்டது. அப்போது கீழம்பாசமுத்திர கிராம மூன்சீபும் சேரன்மாதேவி தாலூகாபோர்டு வைஸ் பிரஸிடெண்டுமான ஸ்ரீமான எ எஸ். மரகதசுந்தரம்பிள்ளையவர்கள் அக்கிராசனம் வகித்தார். 42 அங்கத்தினர் கூடியிருந்தார்கள்.

முதல் முதல் கடவுள் வணக்கம் செய்யப்பட்டு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் இருக்கவேண்டிய அவசியத்தையும், இச்சங்கம இடையில் நின்றுபோனது வருந்தத்தக்கதென்றும ஆனல் அது சரியாய் நடந்த காலத்தில் போதிய நற்பயன்களை கிராம உத்தியோக சமூகத்துக்கு அளித்திருக்கிறதென்றும், ஆதலால் சங்கத்தை புனருத்தாரணம் செய்யவேண்டியது அவசியமென்றும முன்னுரையாக அக்கிராசனர் உபந்யசித்தார்.

சங்க அங்கத்தினரும், பாப்பான்குளம் கிராம முன்சீபும் தாலூகா போர்டு மெம்பருமான ஸ்ரீமான் பி. எ. ஷண்முகசுந்தரமுதலியார் தேருக்கு அச்சாணி எவ்வளவு முக்கியமானதோ அதுபோல பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு உத்தியோக வர்க்கத்தில், கிராம உத்தியோகஸ்தர்கள் முக்கியமானவர்களென்றும் தேர் அச்சாணியை எப்படி கண்காணிப்பதில்லையோ அப்படி கிராம உத்தியோகஸ்தர்களும் கண்காணிக்கப்படவில்லையென்றும் கிராம உத்தியோகஸ்தர்களின் வேலை மிக மிக அதிகமென்றும் அவர்கள் சம்பளம் மிக சொற்பமென்றும் இவர்களுக்கு இப்படி சம்பளம மிகவும் குறைத்துக்கொடுப்பதிலிருந்துதான் சர்க்கார் அலுவல்கள் ஒழுங்காயும் சீக்கிரமாயும் காலா காலங்களில் நடைபெறவில்லையென்று எண்ண இடமிருக்கிறதென்றும் பின்னும் பல இடைஞ்சல்களும வேலைப்பளுவும இருக்கிறதென்றும் மேல்கண்ட இடைஞ்சல்களையும், வேலைப்பளுவையும் காருண்ணிய கவர்ன்மெண்டாரவர்கள் தெரிந்து கர்ணம கி. முக்களுக்கும் தனித்தனி நபர் 1-க்கு ரூ 35 வீதமும் கிராம சிப்பந்திகளுக்கு ரூ 15 வீதமும் நபர் 1-க்கு சம்பளம கொடுக்கவேணுமென்றும் பின்னும் பல விபரங்களும் விரிவாய் உபந்யசித்தார்கள். அதன் பிறகு சங்கத்திற்கு பிரமதேசம கிராம முன்சீபு ஸ்ரீமான எ. கிருஷ்ணய்யர் பி. எ பிரஸிடெண்டாகவும், சேரன்மாதேவி கிராமம கர்ணம் ஸ்ரீமான் சங்கரகுமாரபிள்ளை வைஸ் பிரஸிடெண்டாகவும அடையக் கருங்குளம் கிராமம கர்ணம் ஸ்ரீமான் டி. சூரியமூர்த்தியாபிள்ளை பாப்பான்குளம் கிராமம் கிராமமுன்சீபு ஸ்ரீமான் பி எ. ஷண்முகசுந்தரமுதலியார காரியதரிசியாகவும் பொக்கிஷதாரகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரஸிடெண்டு வைஸ்பிரஸிடெண்டு, காரியதரிசிகள் உள்பட 17 பேர்கள் அடங்கிய நிர்வாக சபையும ஸ்தாபிக்கப்பட்டது. சங்க விதி தயார் செய்யவேண்டியதற்காக பிரஸிடெண்டு உள்பட 11 பேர்கள் அடங்கிய ஒரு சப் கமிட்டியும் நியமனம் செய்யப்பட்டது. பின்னும் சில தீர்மானங்கள் செய்யப்பட்டு பிறகு பிரஸிடெண்டு அவர்கள் முடிவுரையான பின் வந்தன உபசாரம் சொல்லி சபை கலைந்ததென்று சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

### ஸ்வராஜ்யாவின் மதிப்புரை.

கிராமானுகூலன் பத்திரிகையின்:— இரண்டாம் ஆண்டு எட்டாவது சஞ்சிகை வரப்பெற்றோம் கிராமமக்களுக்குத் தேவையான பல விஷயங்கள் பற்றிய கட்டுரைகள் இதில் காணப்படுகின்றன. பாலையூர் சக்தி நிலையத் தலைவர் ஸ்ரீ மான் பி. ராஜகோபாலய்யர் "கிராமப்புனருத்தாரணம்" என மகுட மிட்டு தொடர்ச்சியா ஓர் வியாசம் எழுதி வருகிறார் கிராமவாசிகளின் நலனுக்காக உழைத்து வரும் இப்பத்திரிகையை அனைவரும் ஆதரிப்பரென எண்ணுகிறோம்,

விளம்பரம்.

த. ச. சுப்புராயலு செட்டி & பிரதர்ஸ்.,
ஜவுளி, பித்தளை, வெள்ளி பாத்திரங்கள்,
ஷாப் வியாபாரம், மன்னார்குடி.

பாலச்சந்திர பற்பொடியை உபயோகியுங்கள்!
சகலவித தந்தரோகங்களையும் நிவர்த்திக்கும் !!
பற்களை உறுதிப் படுத்தும் !!!



## கிராமபுனருத்தாரணம்.

(ஸ்ரீ மான், P. ராஜகோபால ஐயர் பாலையூர் ஆச்ரமம் எழுதுகிறார்.)

எந்தெந்தத் துறைகளில் நம்நாடு சீர்கேடு அடைந்திருக்கின்ற தென்பதைப்பற்றி ஆராயப் புகுந்தால் மனம் திடுக்கிடுகின்றது. எந்த துறைகளில்தான் நாம் சீர்கேடு அடையாமலிருக்கின்றோம்! சமூகம், பொருளாதாரம், ராஜீயம், கல்வி, சுகாதாரம், மற்றுமுள்ள எல்லாவற்றிலும் நாம் கீழ் நிலையை அடைந்துவிட்டோம். காரணம் நம் நாட்டிற்கு ஒவ்வாத ஆக்ஷிமுறைக்கும், நாகரீகத்திற்கும் நாம் இடம் கொடுத்ததே. சென்ற நூற்றாண்டுகளுக்கு மேலாக நம் விருப்பத்திற்கு மாறாக நம் நாட்டில் அதிகாரம் செலுத்திவரும் அன்னிய அதிகாரவர்க்கத்தின் சூழ்ச்சிகளினாலும் கொடுமைகளினாலும், மேனாட்டுப் பைசாச அநாகரீகத்தின் பிரபல்யத்தினாலும் நாம் தலைதூக்கமுடியாத நிலைமைக்கு வந்துவிட்டோம் நாம் இதிலிருந்து விடுதலை அடைந்தே தீரவேண்டும்.

ஸ்ரீராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன" என்று சொல்லும்படியாக அவ்வளவு பலமான அஸ்திவாரத்தின்மேல் அமைக்கப்பட்டிருந்த கிரும வாழ்க்கை சீர் குலைந்து அழிந்துவிட்டது.

இப்பொழுதுள்ள ஆக்ஷிமுறையில் ஸ்ரீராமன் தலைமை வகித்தாலும் கெடுதலைத்தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை. ஆனல் முற்கால ஆக்ஷிமுறையில், துஷ்டர்கள் இருந்தாலும் நன்மைக்குமாறாக ஒன்றும் செய்யமுடியாது. அரசன் எவனாய் இருந்தாலும், எவ்வளவு பேர்மாறினாலும், தங்களுக்கு யாதொரு இடைஞ்சலுமில்லாமல், தங்கள் காரியங்களை தாங்களே ஸாவதானமாய் செய்துகொண்டும், தங்களுக்கு வேண்டிய தேவைகளுக்கு, பிறரை எதிர் பாராமல் தாங்களே தயார் செய்துகொண்டும், தங்களுக்கு வேண்டியதுபோக பாக்கி உணவையும், ஆடையையும் வெளிநாடுகளுக்கு ஏராளமாய் அனுப்பிக்கொண்டும், மிகுந்த திருப்தியுடனும், சக்தியுடனும் இருந்த கிரும வாழ்க்கையை மறுபடியும் நிலை நாட்டவேண்டும்.

இப்பொழுது ஓர் கிருமத்திற்கு சென்று பார்த்தால் குறைகளுக்கு அளவே இல்லை ஜனங்களிடம் அவநம்பிக்கையும், சச்சரவும் ஏற்பட்டு இருக்கிறது. கிரும பரிபாலனத்தில் ஈடுபடாமலும், சுகாதாரத்தில் மிகுந்த அசிரத்தையாயும், தேசிய விஷயங்களில் அறிவில்லாமலும் இருக்கிறார்கள். தினே தினே கிருமங்கள் க்ஷீணதசை அடைந்து வருகிறது. பூஸாரம் குன்றிவிட்டது. விவசாயிகள் கடன்பட்டுத் தவிக்கிறார்கள். வேளாண்மைக்குவேண்டியகருவிகளும் விதைகளும் கால் நடைகளும் குறைந்துவிட்டன. நிலங்கள் தரிசுகிடக்கின்றன. தெருக்கள் பாழடைந்து வீடுகள் இடிந்து கிடக்கின்றன கிருமத்திலுள்ள ஒவ்வொருவராய் நகரத்தை நோக்கி, பிழைப்பை உத்தேசித்தோ. டாம்பீகத்திற்காகவோ சென்று அங்கு ஒருவரை ஒருவர் அடித்து தின்கின்றார்கள். கிருமங்களில் வேலைக்கு வழி இல்லாமல் வெளிநாடுகளில் கூலிகளாய் பலர் சென்று அங்கு தங்கள் உயிரையும், மானத்தையும் துறக்கின்றார்கள். நம் நாட்டில் விளையும் சிறிது மூலப் பொருளையும் அன்னியர்களுக்கு கொட்டிக்கொடுக்கின்றோம். 7-கோடிஜனங்கள் ஒருவேளை ஆஹாரத்திற்கு வழி இல்லாமல் ஒவ்வொரு வினாடியும் மடிகின்றார்கள் சென்ற 1923—24 வருஷத்தில் மட்டும் நம் தேசத்திலிருந்து விளை பொருள்கள் 367-கோடியே 4 லக்ஷத்தி 97 ஆயிரம் ரூபாய் மதிப்புக்கு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது அதற்கு பதிலாய் மோட்டார்கார்களும், ரப்பரும், சாராயமும், சுருட்டும், கண்ணாடிசாமான்களும், ஸோப்பும், தைலங்களும், துணியும் நம்தேயத்தில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. நீ அவல் கொண்டுவா நான் உமி கொண்டு வருகிறேன் இரண்டையும் கலந்து ஊதிஊதி நாமிருவரும் தின்போம் என்பதுபோல் இருக்கிறது அதுவுங்கூட இல்லை அவல் கொண்டுவருபவனுக்குத் தான் கொண்டுவந்ததில் பாதியாவது கிடைக்கலாம் ஆனல் நம்நாட்டிற்கோவென்றால் அதுவுமில்லை. இவ்விடமுள்ள உணவுப் பொருள்களை எல்லாம் கொடுத்துவிட்டு, இவ்விடமுள்ளவர்கள் பட்டினி

யில் மடியும்போது கண்ணாடியும், குண்டூசியும் நமக்கு எதற்காக? "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" வைத்துக் கொண்டல்லவோ, மிகுந்ததைக் கொண்டு டாம்பீகத்தில் தலையிட வேண்டும்.

"உழுதுண்டு வாழ்வோர்க்கு ஒப்பில்லை" என்பதற்கேற்க நம்தேச மக்களில் 100க்கு 92 பேர்கள் விவசாயத்தையே ஜீவனமாய்க்கொண்டு இருந்தாலும் தங்களுக்கு வேண்டியதை உற்பத்திசெய்து தங்கள் தேவையை பூர்த்தி செய்துகொள்ளாமல், அன்னியர்களின் தேவைகளுக்கு வேண்டியவாறு உற்பத்தி செய்து கொடுக்கும் கருவிகளாய் விட்டார்கள். இந்நிலைமை தொலையவேண்டும். இதிலிருந்து நாம் விடுதலையடைய குறுக்கேநிற்கும் அன்னிய ஆக்ஷி முறையையும் / அநாகரீகத்தையும் அடியுடன் மாற்றவேண்டும். நம்நாட்டிற்குகந்த அரசியலையும அமைத்து நம் முன்னோர்களின் நாகரீகத்தைப் பின்பற்றவேண்டும்.

ஆகையால் நாமிப்போது செய்ய வேண்டியது

(1) நம் நாட்டின் உயிர் நிலையான கிராமங்களுக்குச் சென்று கிராம ஆக்ஷியை ஸ்தாபிக்க வேண்டும்.

(2) நிலங்களை பாகுபடுத்தி செழிப்பாகசெய்ய வேண்டியதற்கு விவசாய சங்கம் ஸ்தாபிக்க வேண்டும்.

(3) நாட்டின் விளைபொருள்களைக் கொண்டு நமக்குத்தேவையான ஸாமான்களை தயார்செய்யும் நாட்டுக்கைத் தொழில்களை ஆதரித்துவிர்த்தி செய்யவேண்டும்.

(4) அன்னியநாட்டு வஸ்துக்களை அடியுடன் பகிஷ்கரிக்கவேண்டும்.

(5) நம்நாட்டு உணவுபொருள்களைநம்தேவைக் கானது போக பாக்கி உள்ளதைத்தான் வெளி நாடுகளுக்கு அனுப்பவேண்டும்.

(6) ஒவ்வொரு கிராமங்களிலும் அங்குள்ள சச்சரவுகளைத் தீர்க்கவும் பொது விஷயங்களில் சிரத்தை எடுத்து சுகாதாரம், தர்மபரிபாலனம் முதலியவைகளை கவனித்து நிர்வகித்து வரவும் உடனேபஞ்சாயத்துஸபைகள் ஏற்பட வேண்டும்.

(7) நாட்டுக்கல்வி புகட்டும் கிராம பள்ளிக்கூடம் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்த வேண்டும்.

(8) வறுமையில் ஆழ்ந்துகிடக்கும் விவசாயிகளின் கஷ்டத்தை போக்கவும் ஜனங்களிடம் உண்மையான ஒற்றுமையும் பரஸ்பர அன்பும் ஏற்பட ஐக்கிய நாணயச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டும்.

(9) நம்மதகோட்பாடுகளுக்கு நேர்மாறாக நம் சமூகத்திலிருந்துவரும் சில தீமைகளை ஒழிக்க சமூகச் சங்கங்கள் ஸ்தாபிக்க வேலை செய்ய வேண்டும்.

இவைகளை செய்ய ஒவ்வொரு கிராமத்திலும் பொதுஜன ஊழியத்தில் உண்மையான ஊக்கமுள்ள ஒருவர் முன்வரவேண்டும். அவர்கள் சிறிது சிரமம் எடுத்துக்கொண்டால் கிராமத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து விடலாம். ஒவ்வொரு கிராமத்திலும் ஒருவரை தேடிப் பிடித்துத் தயார் செய்யவேண்டியது இப்பொழுதுள்ள ஊழியர்களின் முதற் கடமையாகும். நம்கிராம வாழ்க்கையை சீர்படுத்தி முன்னிலைமைக்குகொண்டுவர 320லக்ஷம் மக்களில்7லக்ஷம் பேர் கிடைப்பது அரிதல்ல, அவர்கள் முன் வர வேண்டும். அவர்கள் வரும்வரையில் கிராம புனருத்தாரணத்திற்காக உழைத்து வரும் பாலையூர் சக்தி நிலையம் போல் பல ஆச்ரமங்கள் ஆங்காங்கு பலஇடங்களில் ஸ்தாபித்து சுற்றி உள்ள பல கிராமங்களில் உள்ள குறைகளை நிவர்த்தித்து முன்னேற்றத்திற்கு உழைத்துவர வேண்டும்.

**தயவுசெய்து சந்தாவை இன்றே அனுப்பிவையுங்கள்.**



# பண்டைத் தமிழரின் மேம்பாடு.

(ஸ்ரீமான், ஊ சா. வேங்கடராம ஐயர் எழுதியது.)

(180-வது பக்கம் தொடர்ச்சி)

## அரசாட்சி.

இங்ஙனம் மேம்பாட்டை அறிவிக்கக்கூடிய வேறு பல செய்திகளும் உண்டு. அவை அனைத்தையும் கூறுவதிலும் அனைத்திற்கும் தாயகமான அரசாட்சியைப்பற்றிக் கூறுவது எளிதிலே விளக்குவதாகும் என்பது கருதி ஈண்டு அது பற்றிச் சில கூறப்படுகிறது. அக்காலத்துத் தமிழரசர்கள் தங்களுக்குப் பரம்பரையாகக் கிடைத்த அரசச் செல்வத்தை விதிக்கடவுளாலே தரப்பட்ட கொடைப் பொருளாகக் கருதி வந்தார்கள். தங்கீழ் வாழும் குடிகளை இனிது காப்பாற்றும் ஆற்றலற்றிருப்பின் அது தமக்குப் பெரும் பாரமானதாயிருக்கும் என்பதை இனிது உணர்ந்திருந்தார்கள். அரசர் மேலான குணங்களைப் பெற்றவராயிருப்பின் அரசாட்சி மிகவும் எளியதாயிருக்கும் என்பதை அறிந்திருந்தார்கள். குடிகள் பழித்துத் தூற்றக் கூடிய கொடுங்கோலராக இருத்தல் கூடாது என்பதிலே பெரிதும் கவனம் செலுத்தி வந்தார்கள். அருளும் அன்பும் நிறைந்த பெரியோர்களது சேர்க்கையையே பெற்றுவந்தார்கள். தங்களுடைய முன்னோர்கள் பின்பற்றி வந்த நீதி நூல்களையும். பிற அறிவு நூல்களையும் கற்றுவந்தார்கள். யாகாதி கருமாக்களைச் செய்துவந்தார்கள். தக்கார்க்குத் தக்காங்கு ஈத்துவந்தார்கள். புலவர்களால் பாடப்படுவதைப் புகழாகவும், பாடப்படாமையை இழிவாகவும் கருதிவந்தார்கள். இவற்றோடு படைக்கலப் பயிற்சி, பகைவரை வாட்டல், குடிகளைக் காத்தல் ஆகியவற்றிலும் தலைசிறந்து விளங்கினார்கள்.

அன்றியும், அவர்கள் நல்லறிவாளர்களது சேர்க்கையைப் பெற்றிருந்தமையால் சபையிலே பேசப்பெறும் அரியவிஷயங்களையும் அறியவல்ல புத்தி சத்தி யுடையவர்களாயும், விரைவிலே முடிக்கவேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பதிற் சோம்பலில்லாதவர்களாவும் இருந்தார்கள்; தங்குடைக்கீழ் வாழும் குடிகளை 'விட்டில் கிளி நால் வாய் வேற்றரசு தன்னரசுநஷ்டம் பெரும் பெயல் காற்று' முதலிய எவ்வகைத் துன்பமும் அடையாவண்ணம் உயிர்போலக் காத்துவந்ததுடன் அவர்களிடம் சந்திரன்போன்ற கருணையும் மேகம்போன்ற தண்மையும் உள்ளவர்களாய் இருந்து வந்தார்கள்; சிறிதும் காலத்தை வீண் ஆக்காமல் ஒவ்வொரு நாள் பகற்பொழுதையும் மூன்று பாகங்களாகப் பிரித்துக்கொண்டு முதற் பத்து நாழிகைகளைப் பெரியோர்பாற் பலவகைப் பட்ட அறவுரைகளைக் கேட்டலிலும், இடைப் பத்து நாழிகைகளைத் தம்மைக் காணவந்த பரிசிலர்க்கு வேண்டுவனவற்றைக் கொடுத்தல் விருந்தினர் சுற்றத்தார் முதலியவர்களுடன் உண்ணல் ஆதியவற்றைச் செய்வதிலும், கடைப் பத்து நாழிகைகளை மந்திரி முதலானவர்களுடன் ஆட்சி பற்றிய ஆலோசனைகளைச் செய்வதிலும் போக்கி வந்தார்கள்; நியாய முரசம், கொடை முரசம், வெற்றி முரசம் என்ற மூன்றுவகை முரசங்களைக் கொண்டு தம்முடைய செய்கைகளைக் குடிமக்களுக்கு அறிவித்து வந்தார்கள்.

பால் தனது இனிப்புமாறிப் புளிப்பினும், சூரியன் தனது ஒளிமாறி இருளினும், நான்கு வேதங்களின் ஒழுக்கம் வேறுபடினும் தங்களது இயற்கை அறிவினின்று சிறிதும் வேறுபடாதவர்களும்; அரசன் தவறியகாலத்தில்—அவன் தம்மை மதிப்பதற்காக—அவன் சொல்வதையே சரி சரி என்று கூறித் தங்களுடைய கடமையை மறந்து கைசோர விடாமல் அப்பொழுதே அவனுடைய தவறுபாட்டை எடுத்துக்காட்டி இடித்துரைத்து அவனைத் திருத்தக்கூடியவர்களும், முக்காலங்களையும் முன்னர் உணர்ந்து நன்கு ஆராய்ந்து உறுதியாயவற்றையே கூறுகின்றவர்களும்; நால்வகை உபாயங்களையும் இடமறிந்து காலமறிந்து உபயோகப்படுத்தும் சதுரர்களுமாகிய உத்தம மந்திரிமார்கள் என்கிற அறிவுடைச் சுற்றத்தார்களைப் பெற்றிருந்தார்கள். அன்றிப் பிற இன்றியமையாத படை, குடி, கூழ் நட்பு, அரண் ஆகிய ஐவகை உறுப்புக்களையும் ஒருங்கே போற்றிவந்தார்கள்.

இவர்களுள் மந்திரிமார், கருமாதிகாரர், சுற்றத்தார், கடைக்காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், இவுளி மறவர், யானைவீரர் என்ற எண்

வகையாளர் கூடிய எண்பேராயம் என்ற சிறப்பு வாய்ந்த இக்கால சட்டசபை போன்ற ஓர் ஆலோசனை சபையையும்; மந்திரிமார்புரோகிதர் ஒற்றர், சேனாபதியர், தூதர் ஆகிய ஐம்பெருங் குழு என்ற சிறப்பினையுடைய இக்கால நிர்வாக சபை போன்ற ஓர் அதிகார வகுப்பையும் பெற்றிருந்தார்கள்.

இவ்வாறு தெளிந்த அறிவுடன் தக்க ஆராய்ச்சியாளர்களாகிய பெரியோர்களுடன் கலந்து யோசனை செய்தே நாட்டை ஆண்டுவந்தார்களாதலின், அவர்கள் தங்களது நாட்டிலுள்ளோர் எவ்வகைத் துன்பமும் இன்றி இனிது வாழ்வதற்காகவும், செங்கோல் கோடாது இனிது நடைபெறுவதற்காகவும், தம்மிடம் வந்து குறைகளைக் கூறி முறையிட்டுக் கொள்வோர் அனைவர்க்கும் எளிதிலே காட்சி கொடுத்து வந்தார்கள். அவர்களோடு அளவளாவி இனிமையாகப் பேசி வந்தார்கள்; அவர்கள் கூறுவனவற்றை முற்றுங் கேட்டுத் தீர ஆராய்ந்து தக்கவாறு நியாயம் வழங்கிவந்தார்கள், அன்றியும் நியாயம் வழங்கும் முறையில் அவர்கள் வழக்கிலே சம்பந்தப்பட்டவர்களைக் கவனிப்பதில்லை; 'இவர் நம்மைச் சார்ந்தவர் ஆதலின் இவரை எப்படியாவது மன்னித்தல் வேண்டும்; இவர் புறம்பானவர் ஆகலின் இவரை எங்ஙனமேனும் தண்டித்தல் வேண்டும்' என்று எண்ணிக் கோல்கோணுமாறு நடப்பதில்லை; யாண்டும் நடுவு நிலைமை தவறாது நீதியையே வழங்கி வந்தார்கள். ஓர் அரசன் எதிர்பாராமல் தானே தேர்க்காலிடை புகுந்து இறந்துபோன கன்றின் தாய்ப் பசுவின் நிலைமையைக் கண்டு தனது ஒரே மகனைத் தேர்க்காலிடை வைத்து அரைக்கலுற்றான் ஓரரசன் தன்னால் காப்பாற்றப்பட்டுவந்த ஒரு வீட்டை ஏதும் தீங்கு நேரிடா வண்ணம் எச்சரிகை செய்தற்பொருட்டுத்தட்டிய தனது கையை மந்திரிகளின் கருத்துக்குப் பொருந்த நீதி தவறியதாகஎண்ணிக்குறைத்துக் கொண்டான். ஓர் அரசன் இழிந்த பொற்கொல்லனது சொல்லைக் கேட்டுக் கோவலன் மாட்டு அநீதி வழங்கியமைக்கு வருந்தி இருந்த சிங்காதனத்திலேயே உயிர் துறந்தான். ஓர் அரசன் தனது மகன் படிற்றொழுக்கம் காரணமாகப் பிறரால் கொலையுண்ணப்பட்டதை நியாயமானது எனக்கருதிச் சிறிதும் வருந்தாதிருந்தான். ஓர் அரசன் தன்னைச்சரியாக நீதிவழங்கச் சக்தியற்றவன் என்று வழக்காளர் நினைக்கா வண்ணம் நரை முடித்து ஆதனத்தமர்ந்து இனிது வழக்குத்தீர்த்தான். ஓர் அரசன் குடிகள் படும் தொல்லைகளை உணர்ந்து வரிப்பொருள்களைத் தள்ளிக் கொடுத்தான். இத்தகைய இன்னும் பல.

இவ்வாறு சிறந்த வகையில் நடுநிலைபிறழாது செங்கோல் செலுத்திவந்த தமிழ் அரசர்கள் தங்களது நாட்டின் பொருளாதார, சுகாதாரங்களுக்கும், கல்வி முதலியவற்றிற்கும் பெரிதும் உழைத்து வந்திருக்கிறார்கள். அவ்வாறே நான்குவித வர்ணப் பாகுபாடுகளிலும் கவனம் செலுத்தியுள்ளார்கள். 'உழவினா கைம்மடங்கின் உலகமே. நிலைக்கிராது' என்பது அவர்களது உறுதியான கொள்கை. உழுதொழில் இனிது நடை பெறுவதற்கும், அதனால் அரசாங்கத்திற்கும் போதிய பல முன்னேற்பாடான காரியங்களைச்செய்து வந்தார்கள்; ஆறு, ஏரி, வாய்க்கால்முதலிய வசதிகளையும், அங்ஙனமே அணைக்கட்டுகள், மணற்போக்கிகள் முதலியவற்றையும் வேண்டிய அளவு திட்டம் செய்துகொடுத்தார்கள்; நிலங்களை அளந்து மண்ணின் உயர்வு தாழ்வுக்கு ஏற்பத் தரப்படுத்தி வைத்தார்கள்; திருடர், விலங்கு முதலியவற்றால் நேரிடும் இடையூறுகளை வாராமல் காத்து வந்தார்கள்; நாட்டின் இயற்கைப் பொருள் நாட்டிற்கே பயன்படுந் துறையில் பல திரக்கைத்தொழில்களையும் வளர்த்துவந்தார்கள் நாட்டின் செய்பொருள் வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுவதற்கும், வெளிநாட்டிலேயே கிடைக்க கூடிய இன்றியமையாச் சில பொருள் தமது நாட்டினர்க்குக்கிடைத்தற்கும் துணையாகப்பண்டமாற்று முறையை நடத்திவந்தார்கள்; வெளிநாடுகளிலிருந்து கப்பல்கள் வந்து தங்கவும் தம் நாட்டுக் கப்பல்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவும் வசதியாகவும், வழிகாட்டியாகவும் துறைமுகங்களையும், கலங்கரை விளக்கங்களையும், அடையாளக் கொடி முத்திரை முதலியவைகளையும் உபயோகப்படுத்தி வந்தார்கள்; மாணவர்கள் ஆசிரியர்கள் என்ற இருதிறத்தினரும் ஒரே இடத்தில் தங்கி உணவு, உடை முதலிய இன்றியமையா வசதிகளைப் பெற்றுத் தமக்கு விருப்பமான மொழிகளைக் கற்றுக் கொள்ளவும், கற்பிக்கவும் சாதனமாயிருக்குமாறு சர்வகலாசாலைகள் எனத்தகும் பல கல்விச்சாலைகளை நடத்திவந்தார்கள். குடிமக்களின் சுகாதாரத்திற்கு இன்றியமையா நீர்நிலை, சிங்காரத்தோட்டம், வைத்திய சாலை முதலிய பற்பல வசதிகளையும் செய்து கொடுத்திருந்தார்கள்; (தொடரும்.)



# ஆரம்பக் கல்வி.

(ஸ்ரீமான் P. பரிமண பல்லவராயர், ஹெட்மாஸ்டர் போர்டுஸ்கூல் திருவெறும்பூர்)

ஆரம்பக் கல்வியின் சீர்திருத்தத்தைப் பற்றி, கனம் ஸ்டேதாம் துரையவர்கள் கூறுகிறபடி ஸ்திரமான கல்வி கற்றவர்கள் என்று கருதும்படி பிள்ளைகள் போதுமான வருஷங்கள் ஸ்கூலில் தங்கிப் படிக்க முடியாமல் வருஷத்திலும் ஏதோ கொஞ்சகாலமட்டுந்தான் படிக்கிறார்கள். இதற்குக்காரணம், பெற்றோரின் வறுமையும், சிறுவர்களாலும் தங்கள் காலக்ஷேபத்திற்கு என்று ஒரு சிறுதொகையேனும் சம்பாதிக்கும்படி பெற்றோர் செய்வதுதான் பிள்ளைகள் ஸ்திரமான கல்விகற்க வேண்டுமானால், அவர்கள் வருஷமுழுவதும ஸ்கூலுக்கு ஆஜராகிப்படிக்கவேண்டும இப்படிச் செய்தால், மிக்க ஏழையானரின் பிள்ளைகளுக்கு ஒருவேளை ஆகாரத்தோடு உடை, புத்தகம், சிலேட்டு, முதலியனவும் அவசியம் வாங்கிக்கொடுத்துக் கட்டாயக்கல்வி முறையை அமுலுக்குக் கொண்டு வரல் வேண்டும்.

ஒன்றிரண்டுவருஷங்களுக்குள்ளேயே பிள்ளைகள் ஸ்கூலை விட்டுவிடுவதற்கு முக்கிய காரணம், அனேகம் ஸ்கூல்களில் ஒரே உபாத்தியாயா வேலைசெய்வதென்று சொல்லப் பெறுகின்றது. இதுவும், ஒரே உபாத்தியார் 5-வகுப்புகளில் 70-பிள்ளைகளுக்கும், 4- வகுப்புகளில் 90-பிள்ளைகளுக்கும் கற்பிக்கப்படுவதென்றும் சொல்லப் பெறுகின்றது. இம்மாதிரியிருப்பது எங்கோ சிற்சில இருக்கலாமே தவிர, பெரும்பான்மையான பாடசாலைகளில், அதுவும் கிராமாந்தரங்களில் 30-40 பிள்ளைகளுக்குமேல் இருக்கமாட்டார்கள். ஆனால் ஒரு உபாத்தியாயர் பல வகுப்புகளில் பல பிள்ளைகளுக்குக் கற்பிப்பது அசாத்தியந்தான் ஆனால், பிள்ளைகள் மேல்வகுப்பிற்கே மாற்றப்படாமல் அதேவகுப்பில் படிப்பதற்கும், பிள்ளைகள் ஸ்கூலை அடிக்கடி விட்டுவிடுவதற்கும் அதுவே காரணமெனப்படுகிறது. காரணம் அதுவல்ல, மேலே கூறியிருப்பதும், ஏழைகளல்லாத பெற்றோரும் தம் குடும்ப வேலைகளுக்குப் பிள்ளைகளை சிறுவயதிலேயே படிக்கவேண்டிய காலத்திலேயே படிப்பைப் பெரிதாயெண்ணாமல், தங்கள் ஆஸ்தி பாஸ்திகளாகிய செல்வத்தையே பெரிதும் மதித்தும், பிறரைக் கொண்டு தம் குடும்பகாரியங்களைப் பார்ப்பதால் அவர்களுக்குக் கொடுக்க நேரும் சிறுதொகையை சிக்கன விஷயமாகக் கொண்டும், தம் பிள்ளைகளை அத்தொழிலில் ஈடுபடுத்துவதுமேயாகும்.

துரையவர்களின் அபிப்பிராயப்படி 4-வகுப்புகளுக்கும் ஒரே உபாத்தியாயர் உள்ள பாடசாலைகளில் கல்வி குறைவாகத்தான் இருக்குமென்று நாம்இயம்பவேண்டியதில்லை. அறிவறிந்த உண்மையாளரெல்லாம் அறிந்ததே. ஆனால், சில பரீட்சாதிகாரிகளும் உணராமலில்லை. சிலர் உணருவதில்லையென்றும் உரைக்கலாம். உணராமல் ஒரு பெருந்துறைவாய் சுமையாய் உபாத்தியாயர்களின் மீது சுமத்தி விடுகின்றனர். இச்சுமை பெருந்தோஷத்திற்கு இடமாகி விடுகின்றது. தாலூகாபோர்டு, முனிசிபால்ட்டி ஆகிய ஸ்தலஸ்தாபனத்தார்களும் பரீட்சாதிகாரிகளின் அறிக்கையைக்கொண்டு உபாத்தியாயர்களை வெருட்ட, பயமுறுத்த, கண்டிக்க ஆரம்பிக்கிறார்கள். ஏழை உபாத்தியாயர்கள் இதை அறிந்திருந்தாலும் ஸ்தலஸ்தாபனத்தாருக்கும் பரீட்சாதிகாரிகட்கும் இதை எடுத்துரைத்தாலும் யாதுபயன்; பல மன்னிப்புக்கடிதங்கள் எழுதிக்கொடுத்தும் கும்பிடுகள் போட்டும் மனச்சாட்சியை விற்கவும் வேண்டித்தான் ஏற்படுகிறது. சில பரீட்சாதிகாரிகள் உணர்ந்தாலும், உணர்ந்ததை உபாத்தியாயர்கள் முன்னிலையில் உரைத்து ஒப்புக் கொண்டாலும், எழுதும் வகையில் தம் மனச்சாட்சியைக்காட்டுவதில்லை. இதுஇவர்களின் மனப்பான்மையோ மறதியோ இறைவனுக்குத்தான் தெரியும்.

ஆரம்பக் கல்வியைப் பலப்படுத்த உண்மையாயும் முழு உபயோக முள்ளவையாயும் வேலைசெய்யும்படி 1920-ம் வருடத்திய சட்டப்படி ஜில்லாக் கல்விச் சபைகள் ஏற்பட்டிருப்பினும, இவைகளும் தாலுக்கா போர்டுகளும் அவைகளிலுள்ள கிராமாந்தர மெம்பர்கள் கல்வியைப்பற்றி எத்தனை தடவை தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை ஆலோசித்திருப்பார்கள், அறிவித்திருப்பார்கள் என்று பார்ப்போமானால் அது மிக மிக சொற்பமாகவே இருக்கும். கல்வி நிர்வாகக் கமிட்டிகள் ஏற்படுத்தி கல்வியிலாகா அதிகாரிகளுடன் நன்குகலந்து, அவர்களுடைய யோசனைகளின்படி நடத்துவதற்குத்திரவிய உதவி பெற்ற ஸ்கூல்களின் மானேஜர்களிலும் ஆசிரியமானேஜர்களான மெம்பர்களாய்ச் சேர்க்கப்பட வேண்டியதோடு, கல்வி விருத்தியில் உழைப்பாளிகளாயும் உண்மையாளராயும் மனச்சாட்சிக்குவிரோதமில்லாமல் நடப்பவர்களாயுமுள்ள ஆரம்ப ஆசிரியர்களையும் மெம்பர்களாய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டுவதும் அவசியத்தி

னும் அவசியமாகும்.

கனம் துரையவர்களின் ஏற்பாட்டின்படி அனுவசியமான ஸ்கூல்களை மூடுதலுமொன்று என்று தெரிகிறது. அனுவசியமான ஸ்கூல்களென்பது சாதாரணமாய் பிள்ளைகள் தாம் வசிக்குமிடத்திலிருந்து பாடசாலையிருக்குமிடத்திற்குப் போகக்கூடிய தூரத்துக்குள் உள்ள ஒன்றுக்கு அதிகப்பட்ட பாடசாலைகள் என்றே தோன்றுகிறது. அப்படியாயின், அவைகளை மூடித்தற்காலம் அநேகமாக நகர்ப்புரங்களில் இருப்பதுபோல் அடிக்கொரு பாடசாலையில்லாமல் அகற்ற வேண்டியது அவசியமே. சிற்சில கிராமங்களில் மட்டும், கிராமத்தினர்களுக்குள் ஏற்பட்டுள்ள கட்சி பிரதிகட்சிகளின் காரணமாக, ஒன்றுக்கு மேற்பட்டு இரண்டு பாடசாலைகள் இருப்பதும் உண்டுதான். ஒரு சில வறுமையாளரின் வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்து அவருக்கு ஆதரவு காட்டும் வழியில் அவரை ஓர் உபாத்தியாயராக அமர்த்தித் தம்முடையவும் தமக்கு வேண்டியவர்களுடையவும் பிள்ளைகளை ஒரு இடத்தில் சேர்த்துக் கொடுத்து நடத்தச்செய்யும் சில குடித்தனக்காரர்களும் பாடசாலைகளுங் கூட இல்லாமற்போகவில்லை. இவ்விடங்களில் போர்டு பாடசாலை யிருப்பினும் அங்கு அனுப்புவதில்லை. இப்படிப்பட்ட சில விடங்களில் சித்தை யில்லாத தாலூகா போர்டு உபாத்திமார்களும் மிகச் சொற்பமாகவேனும் இருக்கவுங் கூடுந்தான். இவைகளெல்லாங்கூட அகற்றப் படவேண்டியதுதான். தாலூகா போர்டாரும் பஞ்சாயத்து ரிஜிஸ்தரார் ஜெனரலவர்களும் கிராமங்களில் கிராம பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்த எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு கிராமத்துக்கும் எத்தனையோ தடவை சென்று திரும்பி வருகிறார்கள். ஜனங்களுக்கு உணர்ச்சி ஏற்பட்டு காரியங்கள் நடப்பதெனின், அது இக்காலத்தில் பழையதிண்ணைப் பள்ளிக்கூடங்களில் படித்தவர்கள், இருக்கும் தற்காலத்தில் இல்லையென்றே சொல்லவேண்டும். இக்காலத்திய பாடசாலைகளில் படிக்கும் தற்கால மாணவர்கள், பிரஜைகளாய் வரும் எதிர் காலத்தில்தான் அவ்வுணர்ச்சியுடன் முனைவரக்கூடும். ஆரம்பக்கல்வி விருத்தியும் இப்படித்தான். இவைகளுக்கெல்லாம் கட்டாயக்கல்வி முறை ஏற்பட்டாலன்றி விருத்தியடைந்து விடுமென்பது சந்தேகந்தான். பாடசாலையில் சேர வேண்டிய பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படி இப்போது தூண்டப்படாமலுமில்லை. ஆதலால், இதற்குக் கட்டாயக்கல்வி முறைதான் சிலாக்கியமாகும்.

பெற்றோர்கள் சங்கங்கள் ஏற்படுத்தி ஸ்கூலிலுள்ள வகுப்பு முறையைப் பிள்ளைகள் படிக்கும்படி ஏற்பாடு செய்தல் உசிதமென்றாலும், ஏழைப்பெற்றோர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் பெற்றோர் சங்கமாவது சர்க்காராவது மேலே கூறியவிதம் உதவிசெய்தால்தான் இந்நோக்கம் ஏற்றதாகும். சின்னஞ்சிறு பிள்ளைகளை ஸ்கூலிலிருந்து நீக்குவதென்பது 4, 5. வயதுள்ள பிள்ளைகளென்றே தெரிகிறது. இப்போது பெற்றோர்கள் 4 4½ வயதுள்ள குழந்தைகளையும் இவைகளால் தங்களுக்கேற்படும் தொந்தரவுகளைத் தாங்கமாட்டாமலேயே பெரும்பான்மையும் பாடசாலைக்கு 4 4½. வயதுக்குழந்தைகளை 5-வயதென்று சொல்லி இவர்களுடன் 3. 3¾. வயதுக் குழந்தைகளையும் உடன் கூட்டி அனுப்பி விடுகின்றனரெனலாம். கிராமாந்தர ஆசிரியர் என் செய்வார். ஊராரின், பெற்றோரின் விருப்பப்படியும் நடந்து கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இல்லையேல், ஊராருக்கு உபாத்தியாயர்மீது விருப்பம் குறைகிறது. தன்மையாயுரைத்தாலும் சிலதான் உணரக்கூடும். பெரும்பான்மையர் உணரக்கூடாதவராயிருப்பர். கண்டிப்புங் கூடாது. இவ்வகையிலும் உபாத்தியாயர் சிறிது பிசகு நேர்ந்தாலும், உபாத்தியாயரிடம் விருப்பம் குறைந்து உபாத்தியாயர் மீது கம்ப்ளெயிண்டுகள் மேலதிகாரிக்குப் புறப்பட்டுவிடும். அவர்களாவது உபாத்தியாயரின் உண்மையை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ளுவதும் சிறுபான்மையாகத்தானிருக்கும். நீ அங்கேபோ, நான் இங்கிட்டு, நடுவே தொங்கட்டும், என்ற மாதிரி, ஜனங்களுக்கும் மேலதிகாரிகட்கும் இடையில் இவ்வாசிரியர்கள் எந்தவிதம் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது? மேல் நாட்டாரும் வடநாட்டாரும் வருவாய் மிகுந்தவர்களாதலின், தங்கள் சின்னஞ் சிறு குழந்தைகளை வைத்துக்கொள்வதற்கென்றே சம்பளங்கொடுத்து ஆயாக்கள் போன்றவர்களை அமர்த்திக் கொள்ளுகின்றனர்.

இத்தென்னாட்டவரோ வருவாய் குறைந்தவர்களாதலின் அப்படி ஆயாக்கள் போன்ற செவிலித்தாய்களை நியமித்துக் கொள்ள முடியாததால், 5 6 வயதுள்ள தங்கள் தங்கள் பிள்ளைகளையே, அதற்குங் குறைந்த வயதுள்ள தங்கள் சிசுக்களை வைத்துக்கொள்ளச் செய்கின்றார்கள். 5 6. வயது பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற் சேர்த்துக் கொள்வது என்றிருப்பதால், அவர்களுடன் அவர்களைவிடச் சிறு குழந்தைகளையும் அனுப்பிவிடுகின்றனர். ஆகவே, பிள்ளைகளின் வயதை 6-அல்லது 7-ஆக ஏற்படுத்துதல் நலமாக விருக்குமென எண்ணுகிறேன்.

பெரும்பான்மையான பாடசாலைகள் உதவி பெறுவைகளாகவே யிருப்பதால், பெரும்பான்மையான பயிலாத ஆசிரியர்கள் அப்பாடசாலைகளில்தான் யிருந்திருப்பார்



கள். காரணம், பயின்ற ஆசிரியர்களுக்குத் தகுந்த சம்பளங்கொடுத்து வைத்துக்கொள்ள முடியாமல், சொற்ப சம்பளங்கொடுத்துப் பயிலாத ஆசிரியர்களை அப்பாடசாலைகளின் மானேஜர்கள் அமர்த்திக் கொள்வதேயாகும். இவர்களுக்கும் சர்க்கார்போதிய கிராண்டைக்கொடுத்து உதவ முற்படுவார்களானால் இக்குறைவுகளையும் இவர்கள் செய்ய ஏதுவிராது எனலாம்.

ஒரு ஆசிரியர் ஒரு வகுப்பில் 35-பிள்ளைகளுக்கு மேலும், 2-வகுப்புகளில் 30-பிள்ளைகளுக்குமேலும் கற்பிக்க கூடாதென்றாலும், 3 4 வகுப்புகளில் 25-க்கு மேல் கற்பிக்கக் கூடாதென்றும் இருத்தல் நலமாகும்.

ஒவ்வொரு ஆசிரியருக்கும் குறைந்தது 20-ரூபாயாவது மாதச்சம்பளமாயிருக்கவேண்டும் என்பதற்குப் பதிலாக, 25-ரூபாயும் வருஷஉயர்வாக 30-ரூபாய் வரையிலுமாவது சம்பளம் ஏற்படவேண்டுமென்று ஏற்பாடாகவேண்டியது அவசியமும் உசிதத்தினும் உசிதமுமாகும், இங்கு, தான் தன்மனைவி இரு சிறு குழந்தைகள் ஆகிய இவர்களின் சம்ரட்சணைக்கேனும் போதிய வேண்டிய வருமானத்தில் தம்புத்தியை இதர வழிகளில் செலுத்தாமலிருக்கச் செய்யவேண்டுமென்பதை கவனித்தல் அத்தியாவசியம்.

பயிற்சி பெற்ற உபாத்யாயர்களையும் பரிசிலனைசெய்து குறைகளை நீக்கிப் பலப்படுத்துதலென்பது, பயிற்சி பெற்றவர்களிலும் தொழில் அநுபவத்தில் தகுதியற்றவர்கள் என்பதாவென்றும், தம்முடைய பொதுக்கல்வியில் மிகக்குறைந்த படிப்புள்ளவர்களாவென்றும் புரியவில்லை. இப்படியாயின், இவர்களை நீக்கிவிடுவதா அல்லது வரையறுக்கப்பட்ட வயதுடையவர்களை மறுமுறையும் பயிற்சிக்கனுப்புவதா என்பதும் தோன்றவில்லை.

பயிற்சிபெற்ற உபாத்தியாயர்களை முதல் 2-வது வகுப்புகளுக்கு கற்பிக்கும்படி ஏற்படுத்துதலென்றால் 3, 4 வகுப்புகளுக்கு பயிற்சிபெறாத உபாத்தியாயர்களாயினும் பாதகமில்லை யென்றேற்படுகிறது. இவ்விதமாயின் இவர்கள் உயர்ந்த பொதுபடிப்புள்ளவர்களாயிருப்பதும் அவசியத்திலும் அவசியம்.

வயது சென்ற பிள்ளைகளுக்குப் பகல் முழுதும் வேலையிருக்குமாதலால், அவர்கட்கு இராப்பாடசாலைதான் அநுகூலமாயிருக்கும். இதுவும் 1½ அல்லது 2மணி நேரத்திற்குள்ளாகவும், 15 பிள்ளைகளுக்குக் குறையாத எண்ணிக்கையும், தினசரி 10பிள்ளைகளுக்கு குறையாத ஆஜருள்ளதாயிருத்தலும் தகுதியானதென்பது எனது அநுபவ அபிப்பிராயமாகும்.

# கிராம உத்தியோகஸ்தர்கள்.

(மேன்மை தங்கிய கவ்ர்னரிடம் 21—2—29ல் சமர்பித்த மேமோரியல்.)

மேன்மைதங்கிய கவர்னர் பிரபு அவர்களே: சென்னை ராஜதானி கிராம உத்தியோகஸ்தர்களின் சார்பாக இந்தத் தூது (டெபுடேஷன்) கூட்டத்தார், மகா சமுகத்தை சந்தித்துத் தங்களுடைய நீண்டகால குறைகளை நேரிற் சொல்லிக் கொள்ளுவதற்கு, சந்தர்ப்பங் கொடுத்ததற்காக, தங்களுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறார்கள்.

மகா மாக்ஷிமைதங்கிய சக்கிரவர்த்தியாரவர்களின் சமீப அசௌகரியத்தில் நாங்களடைந்த திகிலையும் சௌகரியத்தில் எங்களுக்கேற்பட்ட சந்தோஷத்தையும் விரைவிற் பூரண சுகமேற்படவேண்டி நாங்கள் செய்யும் பிரார்த்தனையையும், மகா மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தியாரவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் எங்களுக்குள்ள திடமான இராஜ விசுவாசத்தையும், மகா மாக்ஷிமைதங்கிய சக்கிரவர்த்தியவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

## சம்பள உயர்வு தேவை

இந்த ராஜதானியில் 48000, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மேலிருக்கிறார்கள். அவர்களிற் பெரும்பாலோர், நெடுங்காலமாக பரம்பரை பாத்தியத்துடன் வேலைபார்த்து வருகிறார்கள். கிராமாதிகாரம், ஒழுங்காய் நடைபெறவேண்டி, கிராம உத்தியோகஸ்தர்களுக்குத் தீர்வை யில்லாத மானிய நிலங்களும், தானியரூபமான மானிய சுவந்திரமுங்கொடுத்து, கிராமங்களிலொருவித ஸ்திரமான உரிமையையுங் கொடுத்திருந்தார்கள். 1890-ம் வருஷ முதல் மானிய நிலங்களுக்குத் தீர்வையேற்பட்டது, சுவந்திரம் எடுபட்டது, திட்டமான சம்பளம் ஏற்படுத்தப்பட்டது, அவ்விதமாகக் கொடுக்கப்பட்ட சம்பளம், மிகக் குறைவாயும், கேவலமாயுமிருந்தது ஜமீன்களிலும், ரயத்துவாரியிலும், பல விதமான சம்பளங்களேற்படுத்தி விரும்பத் தகாத வித்தியாசங்களுண்டு பண்ணப் பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டு ஜமீன்தார் ஆகிய இரண்டு எஜமானர்களுக்கு, கணக்குகள் கொடுக்க வேண்டிய மிகுந்த கஷ்டமான பொறுப்பு ஜ

ஜமீன் கிராமஉத்தியோகஸ்தர்களுக் கிருந்த போதிலும் அவர்களுடைய சம்பளம் ரயத்துவாரி கிராம உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் குறைவாயிருக்கிறது. எல்லா இடங்களுக்கும் மாதம்பதினைந்து ரூபாய் (15—0—0) சம்பளமாக செய்து, இந்த வித்தியாசத்தை நீக்க வேண்டுமென்று 14—3—1927ல் சட்ட சபையில் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த தீர்மானத்தை இதுவரை அமுலுக்குக்கொண்டு வராமலிருப்பதைப் பற்றி மிகுந்த வருத்தத்துடன் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். 1923-ம் வருஷம் வட்டமிணைந்த பொழுது வேலையிழந்தவர்களுக்கு வேலை கொடுப்பதென 1926-ல் தீர்மானித்த பொழுது, ரயத்துவாரி கிராம உத்தியோகஸ்தர்களில் கர்ணத்திற்கு ஒரு ரூபாயும், ஹெட்மானுக்கு இரண்டு ரூபாயும் குறைக்கப்பட்டதென்பதையும் தாழ்மையோடு தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். அப்பொழுது எங்களைக் கலந்தார்கள். அது சமயம் கவர்ன்மெண்டாரின் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு ஏற்பட்டிருந்ததால் இவ்விதம் குறைப்பதற்குச் சம்மதித்துக் கொண்டோம். கவர்ன்மெண்டாரின் வரவு செலவுத்திட்டம் ஒழுங்கானவுடன் சம்பள உயர்வு விஷயம் கவனிக்கப்படுமென்று ஒப்பந்தமுமிருந்தது. கவர்ன்மெண்டுக்கு கிராம உத்தியோகஸ்தர்கள் அஸ்திவாரம் போன்றவர்களென்பது மறக்க முடியாத விஷயம். ஆகையால் காருண்ய கவர்ன்மெண்டாரிடமிருந்து எங்கள் விஷயத்தை கவனிக்கும் பாத்தியதையை பெற எங்களுக்கு அதிக உரிமையுண்டென்பதை மிகுந்த தாழ்மையோடு தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். இந்த விவரிக்க முடியாதவையும், எங்களிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதுமான பலவித பொறுப்புவாய்ந்த வேலைகளை யுத்தேசித்து எங்கள் சம்பள உயர்வைப்பற்றி மிகுந்த அனுதாபத்துடன் கவனிக்கக் கிருபை பாலிக்கும்படி மகாசமூகத்தைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## மானிய சுதந்தரம்.

மானிய சுதந்திர காலத்தில் அதாவது, 1910-க்கு முன்னதாக, ஜமீன் கிராமங்களில் ஒரு கிராம உத்தியோகஸ்தருக்கு மொத்த வருமானத்தில் பதிலொரு பங்கு வருஷத்தில் கிடைத்து வந்தது. மானிய நிலங்கள் 60 முதல் 100 ஏகரா வரை இருந்தது. அது பணமாக மாறின் 600 முதல் 1000 ரூபாயாகும். மானிய சுதந்திரத்தை பாசமாய் மாற்றியதால் 600 ரூபாயிலிருந்து வருஷத்திற்கு 60 ரூபாயாகி விட்டது. கிராமஉத்தியோகஸ்தர் ஜமீன்தாருக்கும் கணக்குக்கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த ஏற்பாட்டால் கிராமஉத்தியோகஸ்தருக்கு ஜமீன்தார் ஒன்றுங்கொடுக்காது ஒவ்வொரு ஜமீன்தாரும் வருஷத்தில் 50000 ரூ லாபமடைகிறார்கள். விசேஷப் பொறுப்பை யுத்தேசித்தும் இரட்டையாட்சியை யுத்தேசித்தும், ஜமீன் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டு வரும் சம்பளத்துடன் மானிய சுவந்திரமும் கொடுக்கும்படிக் குத்தரவாக வேண்டியதாய்ப் பிரார்த்திக்கிறோம்.

## உத்தரவு.

எங்களுக்கு மேலான அதிகாரிகளாலும், கவர்ன்மெண்டின் இதர கீழ்த்தர உத்தியோகஸ்தர்களாலும், லோக்கல் போர்டு சிப்பந்திகளாலும் மரியாதையில்லாத கடிதப் போக்குவரத்துக்கள் நடக்கிறது. சர்க்யூட் காலத்தில் சப்ளை செய்வதாலும், எங்களுக்கு மிகுந்த சங்கடமும், கேவலமும் உண்டாகிறது. இந்தக் குறையை நீக்குவதற்கு எல்லா கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்கும், மரியாதையாக நடத்தும்படி அவசியமான உத்தரவு சீக்கிரமாக ஆகவேண்டும்.

## பிரதிநிதித்வம்.

48000 கிராம உத்தியோகஸ்தர்களின் தொகைப் பெருக்கத்தையும் கிராமங்களில் அவர்களுக்குள்ள பொறுப்பையும், மாகாண அரசியலில், அவர்களுக்குள்ள மேன்மையான முக்கிய பங்கையும் கவனித்து, மாகாண சட்டசபையில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கென தனித்த பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

## படி.

கவர்ன்மெண்டிலும், லோக்கல் போர்டுகளிலுமுள்ள எல்லா அதிகாரிகளுக்கும், அநேகமாய்ப் பிரயாணப்படி கொடுக்கப்படும் பொழுது, கிராம உத்தியோகஸ்தர்கள் வேலையின்மீது ரெவினியூ ஆபீஸ்களுக்குச் செல்லுங்காலத்தில் பிரயாணப் படி கொடாமல் மறுக்கப்படுகிறது. சமன் பேரில் சிவில், கிரிமினல் கோர்ட்டுகளுக்குச் செல்லும்பொழுது, அவர்களுக்கு தகுந்த வகுப்புப்படி தான் கொடுக்கப்படுகிறது. அதாவது அமீனுக்கு 3-வது சாவும், காரியஸ்தருக்கு நாலாவதுமே. இது, எங்கள் மரியாதைக்கும் உள்ளபடி செலவுக்கும் கொடுப்பதில் எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகவே யிருக்கிறது. 1923க்கு முன் கிராம உத்தியோகஸ்தர்கள் இரண்டாவது வகுப்பு பட்டாளரிக்கு கந்திருக்கிறார்கள். ஆனதால், ரெவினியூ, சிவில், கிரிமினல் கோர்ட்டுகளின் ஆஜராகும்பொழுது இரண்டாவது வகுப்புப்படி கொடுக்கவேண்டியதாய்க் கவர்ன்மெண்டார் கருணைபுரியும்படி அதிகத் தாழ்மையோடு பிரார்த்திக்கப்படுகிறது.



## சிற்சில திருத்தங்கள்.

சமாசத்தை யுத்தேசித்தும் கிராம கட்சிகளிற் கலவாதிருக்க வேண்டியும், கிராமப்பஞ்சாயத்து கோர்ட்டுச் சட்டம் கிராமப் பஞ்சாயத்துச் சட்டமிவைகளில் கிராம உத்தியோகஸ்தர்களை எக்ஸ் அபிஷியோ மெம்பர்களாயிருக்கும்படிக்கான திருத்தங்களைச் செய்யவேண்டியதாய்க் கோரப்படுகிறது.

இப்போதிருக்கும் நிலையில் கிராமக் கர்ணங்கள் முனிசிபாலிட்டிகளில் எலக்ஷனுக்கு நிற்கலாம். ஆனால் லோக்கல் போர்ட்ஸ் ஆக்ட் 13-வது 54-வது செக்ஷன்களின்படி கர்ணங்கள் அருகதையற்றவர்களாகிறார்கள். இந்த தகுதியின்மையைப் போக்குவதற்கு வேண்டிய திருத்தமென்னவென்றால், அந்தசெக்ஷன்களில் "ஹெட்மான்" என்பதற்குப் பதிலாக கிராம உத்தியோகஸ்தர்கள் என்னும் வார்த்தையை பர்த்தி செய்வதே.

## பரம்பரை பாத்யதை.

பரம்பரை பாத்திய முறை அனுஷ்டானத்திலில்லாத, தஞ்சாவூர், சேலம், தென்கன்னடம், மலபார் முதலிய சிற்சில ஜில்லாக்களும், திருச்சி தென்னாற்காடு, வடஆற்காடு, முதலிய ஜில்லாக்களிற் சிலபாகங்களுமிருக்கின்றன. சென்ற வருஷத்தில் சட்டசபையின் ஒரு கௌரவ அங்கத்தினரால், பரம்பரை பாத்தியதையை, இந்த ஜில்லாக்களுக்கும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்காக ஒரு மசோதாக் கொண்டு வரப்பட்டு அந்த மசோதாவும் செலக்ட்டுக்கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த கனம் மெம்பர் இப்பொழுது சுகாதார மந்திரியாக நியமனம் பெற்று விட்டமையால் அந்த மசோதா, தலையெடுக்காதென்று பயப்படுகிறோம். ஆனதால் அதே மாதிரி மசோதா வொன்று கொண்டுவந்து நிறைவேற்றி வைக்கும்படிக்கு, மகா சமூகத்தின் கவர்ன்மெண்டார் வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கர்ணமும், கிராம முன்சீப் அல்லது ஹெட்மானும், வேலை மரியாதை முதலிய சகல விஷயத்திலும் சமத்துவமானவர்களே. அவ்விதமிருக்க 'வில்லேஜ் ஆபீஸர்ஸ் மானியூலில், கர்ணங்கள், "கிராம முன்சீப்களுக்கு குமாஸ்தாக்கள்' என்று கண்டிருப்பது, விரிவாயெல்லோராலும் வெறுக்கப்படுகிறது. ஆகையால், இந்த வாசகத்தை மானியூலிலிருந் தெடுத்து விடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## மணியார்டர்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மிகவும் சொற்பமான சம்பளமென்பது சகலரு மறிந்த விஷயமே. இந்த அற்பச் சம்பளமும், அதிகச் சிரமமும் செலவுமில்லாது வாங்கமுடியவில்லையென்னும் விஷயத்தை, மகா சமூகம் கவனத்திற்குக் கொண்டுவருவது சங்கடமாகவே இருக்கிறது. ஹெட்குவாட்டரிலிருந்து கிராமம் முப்பது மைல் தூரத்திலிருந்தாலும் சம்பளத்தை நேரில்வந்து பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இது எங்களுடைய குறைந்த சம்பளத்தில், பெரும்பாகத்தை விழுங்கிவிடுகிறது. அகஸ்மாத்தாய் குறித்தகாலத்தில் சம்பளம் வாங்கத் தவறிவிட்டால், கிராம உத்தியோகஸ்தர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படுகிறது. ஆகையால் கிராம உத்தியோகஸ்தர்கள் தங்கள் சம்பளங்களை மணியார்டர் மூலமாய்ப்பெறுவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து, அசௌகரியம், செலவு, அலக்கழிவான நடவடிக்கைகள் முதலியவைகளேற்படா வண்ணம் தடுக்க வேண்டுகிறோம்.

## ராயல் கமிஷன்.

தற்சமயம் சென்னையிலிருந்து விசாரணை நடத்தும் ராயல் கமிஷனின் பலனாக, கவர்ன்மெண்டில் அநேக மாறுதல்களேற்படக் கூடுமென்றெதிர்பார்க்கப்படுகிறது. நாங்கள் ராயல் கமிஷன்முன் சென்று, 48000, கிராமங்களின் விஷயங்களையும், 60000, கீழ்தர சிப்பந்திகளின் விஷயங்களையும், கிராமாந்தர, கில சம்மந்தமான சட்டதிட்டங்களில், அவர்களுக்குரிய பொறுப்பையும், எடுத்துரைக்க வேண்டுகிறோம். ஆகையால், நாங்கள் ராயல் கமிஷன் முன் சென்று, எங்கள் விஷயங்களைச் சொல்லிக் கொள்வதற்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுக்க வேண்டியதாய், மகா சமூகத்தை அதிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறோம்.

## நிர்ப்பந்தம் வேண்டாம்.

ஒருதரம் சர்வே பரீட்சை பாஸ்பண்ணிய கர்ணங்களை மேலதிகாரிகளின் பொர்சின் பேரில் மறுபடியும் சர்வே பரீட்சைக்குப் போகும்படி நிர்ப்பந்திக்கிறார்கள். இந்த மாதிரியான ஏற்பாட்டை ஒழிக்க வேண்டுகிறோம்.

ஜமீன் கிராமங்களில் புரோப்ரைட்டர்களின், வேண்டுகோட்கிணங்கி கிராம உத்தியோகஸ்தர்களை, நிலவரிப் பாக்கிக்காகவும் இதர பாக்கிகளுக்காகவும், கொடுக்காதிருப்பதற்கு தகுந்த காரணங்களிருந்தும் அடிக்கடி சஸ்பெண்டு செய்கிறார்கள். இவ்வித பாக்கிகளை கோர்ட்டுகள் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளும்படிக்கு உத்தரவு செய்ய வேண்டியதாய்ப் பிரார்த்திக்கிறோம்.

## கட்டிடம்.

எங்கள் சங்கத்திற்கிது பத்தாவதாண்டாகியும், எங்கள் சங்கத்திற்கென ஒரு தனி கட்டிடத்திற் கேற்பாடு

செய்ய; எங்கள் பொருளாதார நிலைமை இடங்கொடுக்கவில்லை யென்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறோம், சென்னைபோலொத்த மத்திய இடங்களில் இது அத்யாவசியமாயிருக்கிறது. சென்னையிலொரு காலியிடத்தை எங்களுக்குக்கொடுத்துதவும்படி மகாசமுகத்தின் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்வதோடு, அதிற் கட்டப்படும் கட்டிடத்திற்கு மகா சமுகத்தின் பெயரை வைக்கும்படிக் அனுமதிக்க வேண்டியதாயுங் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வந்தனம்.

மகா சமுகம் இந்தத் தூது (டெபுடேஷன்) க்கூட்டத்தார் விஷயத்தை அபிமானத்துடன் கேட்டதற்காக மறுபடியும் தங்களுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செய்வதோடு, மேற்கண்ட வேண்டு கோட்களை மகா சமுகம் மிகுந்த கருணையுடன் கவனிக்குமென்னும் பூரண நம்பிக்கையுங் கொண்டிருக்கிறோமென்ற விபரத்தையுந் தெரியப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.


தியாகசமுத்திரம், T. S. ராஜகோபாலய்யர்,

களஞ்சேரி, K. P. அய்யாஸாமி அய்யர்,

ஜவுளி வியாபாரம். 48, பெரியதெரு, கும்பகோணம்,

எங்களிடத்தில் பெங்களூர், தர்மாவரம், காஞ்சிபுரம், ஆரணி பெனாரஸ், காரச்சி முதலிய பல ஊர் ஜரிகை சேலை சுத்த பட்டு சேலைகளும், சேலம், காஞ்சிபுரம் ஆரணி துகிலி, துறையூர், குளித்தலை முதலிய பல ஊர் வெள்ளை ஜவுளிகளும், ஜரிகை துப்பட்டாக்களும் மதுரை சுன்னடி சேலைகளும், துப்பட்டாக்களும் ஏராளமாய் ஸ்டாக் செய்து சாயத்துக்கு காரண்டியுடன் குறைந்த லாபத்துக்கு விற்றுவருகிறோம். தாங்களும், தங்கள் இஷ்டமித்திராளுக்கும் சொல்லி நேரில் வந்து பார்த்து வியாபாரத்தை ஆதரிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்,

ஒரு மகானால் அடியேனுடைய முன்னேற்கு அளித்த முறைப்படி அவர்களால் கையாண்டு சௌக்கியத்தை யடைந்தும், அடியேனாலும் கையான்டு நன்மைகள் அடைந்திருக்கிறதுமான

சகலவித குஷ்டம்,

குன்மம், காசம், நீர்ரோகம், யாவணக்கால், கொடிய மேகங்கள், மேகப்படைகள், பாரிசவாய்வு, கைகால்பிடிப்பு, திமிர்வாய்வு, பவுத்திரம், கண்டமாலை, கன்னப் புத்து, லிங்கப் புத்து, யோனிப்புத்து முதலான ரோகங்களை கடவுள் கிருபையால் தருந்த ஔஷதங்களைகொண்டு நிவர்த்தி செய்யப்படும்.

மைசூர் கவர்ன்மெண்டாராலும், நியூயார்க், லண்டன், டோக்கியோ, பர்லின், பாரிஸ், அகமதாபாத் முதலிய தேசங்களின் இண்டர்நேஷனல் சொசைட்டியாராலும, இங்கிலீஷ் டாக்டர்களாலும் பரிசீலனை செய்து மெடலும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது.

கிருஷ்ண டெண்டல் பாம்.

இவ்வற்புத ஆயுள்வேத பற்பொடி சகல பல்வியாதிகளையும்போக்கி பற்களை உறுதியாக்கக் கூடியது. பாட்டில் 1க்கு விலை அணா 4. எல்லா ஷாப்பிலும் கிடைக்கும்.

M. R. ராஜகோபால பிள்ளை,

சந்தான கிருஷ்ண ஆயுர்வேத ஔஷதாலயம், மன்னார்குடி.




# ராணாபிரதாபசிம்மன்.

அல்லது

## "ராஜபுத்திர தேச பக்தி,"

(ஸ்ரீமான், S. மஹாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது.)

(All Rights Reserved)

(186-வது பக்கம் தொடர்ச்சி)

சில நிமிஷத்திற்குள் அரண்மனை வாயிற்காப்போன் குதிரை வீரன் ஒருவனுடன ராணாவின் சமுகத்திற்கு வந்தான் குதிரை வீரன் அரசனைக்கண்டதும பணிந்து எழுந்து ஒரு சிறு கடிதத்தை நீட்டினான். கடிதத்தை பிரித்தான் பிரதாபன் எழுத்தைப் பார்த்தவுடன் அது தன் சகோதரனாகிய சக்தனுடைய கடிதமே என்று அறிந்து கொண்டான் கடிதத்தில் இரண்டோரிடங்களில் ரத்தக்கரை யிருந்ததால் காட்டில் சண்டை நடந்த பிறகு அக்கடிதம எழுதப்பட்டிருக்க வேண்டு மென்று விளங்கியது.

அக்கடிதம் பின்வருமாறு:—

அன்புள்ள அரசே!

காட்டில் நடந்த சண்டையில் கைகலந்து நாம் நின்ற பொழுது, கருணையால் உயிர்முடித்த அந்தணனைநினைத்து தாங்கள் இப்பொழுது வருந்திக்கொண்டிருப்பீர்கள் நானோ தங்களோடு அரண்மனைக்குத் திரும்ப விருப்பமின்றி காட்டிலிருந்தபடியே என் குதிரையுடனும், கத்தியுடனும் வேற்றுநாடு செல்கிறேன். சித்தூரில் அழகிய அரண்மனையில் நமக்குள் ஏற்பட்ட சகோதரத்வம் உதயபுத்திரன் நடுக்காட்டில் முடிவடைந்ததென நினைக்கிறேன். தங்களை மறுபடி காணவேணும் வார்த்தையாடவேணும் எனக்கு இஷ்டமில்லை கடவுளின் அருள் வேறு விதமாக இல்லாத பக்ஷத்தில்' தங்களை மறுமுறை காண்பதற்கு முன்னரே யான் இறந்து போவதேயானாலும் எனக்கு அது விருப்பமே. தங்களால் ஒவ்வொரு நிமிஷமும் வெறுக்கப்பட்ட ஒருவனது உருவம், தங்கள் கண்களில் படுவதற்கு இடமன்றியில் மறைந்து விட்டதைக் குறித்து தாங்கள் சந்தோஷிக்கலாம். மீவாரத்தினிடத்தில் தங்களுக்கு வாய்த்துள்ள அன்பினால் பல கஷ்டங்கள் உங்களுக்கு நேரலாம், அவற்றைக் காட்டிலும் என்னிடத்தில் தாங்கள் காட்டிய வெறுப்பினால் இன்னும் மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்க வேண்டி வரும் என்று நினைக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் பழைய சகோதரன்,
சக்திசிம்மன்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் ராணாவின் மனம் சிறிது கலக்க மடைந்தது சலித்த மனதை ஒரு நிமிஷத்தில் திடம செய்துகொண்டான் பிரதாபன், "உடனே பிறந்தான் நீங்கினும், உற்றார் யார் நீங்கினும், கொண்ட நோக்கத்தை நிறைவேற்றுதல் ஒன்றே என் கடமையும் முடிவே என் வாழ்நாளின் முடிவு." என்று கூறிக்கொண்டே, கவிழ்ந்த முகத்துடன் அரியணையை விட்டு எழுந்திருந்து, தன் அறையை நாடி அரண்மனைக்குள் சென்றான்.

## ஏழாவது அத்தியாயம்.

ஆக்ரா நகரத்தின் அழகிய அரண்மனையின் கொலு மண்டபத்தில் சிற்றரசர் போற்ற, கொற்றக் கொடை நிழற்ற, எம்மருங்கும் ஒளிவீச, மங்கையர் பலர் நடனம் செய்ய, அழகிய அரியணையில் வீற்றிருந்தான் அக்பர் என்ற, மொகலாய சக்கிரவர்த்தி சிம்மாசனத்தின் இருமருங்கிலும் அரசனது ஆப்த நண்பர்களும், மொகலாய சமஸ்தானத்தின் முக்கியஸ்தர்களும் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். அபுல்பஜில், அபுல்பைஜி, பகபத்கான், முதலிய இஸ்லாமியர்கள் ஓர் பக்கமும் பகவான்தாஸ், தோடர்மால், ராஜாமான்சிங், முதலிய ராஜபுத்திரர்கள் மற்றொரு பக்கமும வீற்றிருந்தனர். கூர்ஜரம், மாளவம், வங்காளம், தக்காணம், முதலிய நாடுகளைச் சேர்ந்த அரசர்கள் பலரும ஒருங்கு குழுமியிருந்தனர். இஸ்லாம்மதத்தில் மிகவும் ஆராய்ச்சியும் அறிவுமுள்ள முல்லாக்களும், காஜிகளும், உலமாக்களும ஓர்

223475

பக்கம் கூடியிருந்தனர். பெயர்பெற்ற பாடகர்களும், புகழ்பெற்ற சித்திரக்காரர்களும் ஒரு பக்கம் உட்கார்ந்திருந்தனர். எல்லோருக்கும் சுடுசாயகமாய் வயிரமுடி ஒளிவீச, ஆபரணம் பல விளங்க, சிரித்தமுகத்துடன் அக்பர் தம் அந்தரங்க நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தனன்.

கட்டியக்காரர்கள் ஓர் புறத்தில் நின்று எமது திரிலோக சுந்தரன் சீர்பெற்ற கிங்கரன் என்று வேடிக்கையாக கட்டியம் கூறி நின்றனர். அபுல்பைஜி தான் புதிதாக பாடிமுடித்த கவியொன்றை அரசனுக்குப் படித்துக்காட்டி ஆனந்தத்தினால் தன் நீண்டதாடியை ஒருதரம் உருவிக்கொண்டான். அபுல்பஜில் வங்காளத்தில் சமாதானம் ஏற்படுத்துவதற்கு ஓர் தகுந்த தளகர்த்தனை அனுப்பவேண்டியது அவசியம் என்று கூறினன். தோடர்மால் அரசனை தன் பக்கம் திருப்பி தேசத்தில் வரிப்பணத்தைத் அதிகரிப்பதற்கு தான் யோசனை செய்து முடித்த தீர்மானங்கள் சிலவற்றை அரசனிடம் கூறினன். பகவன்தாஸ் அரசனை நோக்கி தன்னுடைய சகோதரியின் மூலமாக சக்கிரவர்த்திக்கு தோன்றிய ஸலீம் என்ற குமாரனை ராணுவத்தில் கொஞ்சகாலம் அமர்த்தவேண்டுமென்று கேட்டான்.

அரசன் சமீபத்தில் ஏற்படுத்திய "தீனுலாஹீ" என்ற மதஸ்தாபனம் இஸ்லாம் மார்க்கத்தின் முக்கியமான தத்துவங்களுக்கு விரோதமான காரியம் என்று அதிவைதீகமான முல்லாக்கள் சிலர் ஓர் மூலையில் உட்கார்ந்து கோபத்துடன் பேசிக்கொண்டிருந்தனர், இன்னும் சிலர் ஓர் தனியிடத்தில் உட்கார்ந்து பெண்மக்களை முந்தயிடுகாலத்து இடைஞ்சலாயிருக்கிறதென்று காரணங்கூறி மதச்சின்னமாகிய தாடியை அரசன் எடுத்து விட்டதையும் பலரையும் அவ்வாறே எடுத்துவிடும்படி கூறுவதையும் கண்டு, ஆத்திரத்துடன் ஒருவருக்கொருவர் உரையாடிக் கொண்டிருந்தனர். இந்துப் பெண்களை அரசன் அதிகமாக விரும்பி மணஞ்செய்து கொள்வதை பலர் கண்டித்து ஓர் பக்கத்தில் தமக்குள் வாதத்தையாடிக் கொண்டிருந்தனர். அரண்மனை விகடன் ஒருவன் திடீரெனத்தோன்றி அரசனுக்கு முன்பக்கத்தில் நின்று, ஆ! ஆ! வென ஒருதரம் கனைத்து, "நமது அரசனைப் போல் கோலாகல புருஷன் இல்லை, எண்ணற்ற காதற்கிழத்திகள் நீங்கலாக முக்கிய மனைவியர் நம் அரசனுக்கு நால்வர். அவருள் இன்பமாய்ப் பேச பாரசீக மங்கையொருத்தி வீட்டு வேலைபார்க்க குருகிஸ்தானத்தின் குமரியொருத்தி. புத்திரரை பெற்றெடுக்க இந்துமாது ஒருத்தி இம்மூவருக்கும், தன்னிடத்தில் பயமிருக்கும்படி ஓயாமல் அடிப்பதற்கு [illegible] ஒருத்தி. என்ன மனைவியர்! நல்லதொரு குடித்தனம்." என்று வேடிக்கையாகக் கூறினன். எல்லோரும் நகைத்தனர். அரசனும் நகைத்தான்.

திடீரென்று அரண்மனைக்கு வெளியில் ஒரு ஆரவாரம் உண்டாயிற்று சில நிமிஷங்களுக்குள் வாயிற்காப்போன் அரசனிடம் வந்து ', அரசே! மீவாரத்தின் இளைய ராணுவும், பிரதாப சிம்மனுக்கு தம்பியுமாகிய சக்திசிம்மர் தங்களுடைய சமூகத்தை நாடி இங்கு வந்திருக்கின்றனர். அன்னவர் அரண்மனையை சமீபித்ததும் உமுடைய நண்பர்கள் அவரை வரவேற்று ஆரவாரம் செய்கின்றனர் உடனே அழைத்து வருவதற்கு உத்திரவை எதிர்பார்க்கிறேன்" என்று கூறி வணங்கினன்

அரியணையில் இருந்த அக்பர் முதலில் சிறிது ஆச்சரியமடைந்து ஆ! என்ன. மீ-வா ர-மா? பிரதாபனது தம்பியா சக்தி...............பெயரென்ன?

வாயிற்காப்போன்:— அரசே! அவர் பெயர் சக்திசிம்மரெனக் கூறினர்.

அக்பர்:— நல்லது, நீ போய் அவரை வரச்சொல். வாயிற்காரன் போய் மருபடியும் தலைவணங்கி, மண்டபத்தை விட்டு அகன்றான்.

அன்னவன் நீங்கியவுடன் அக்பர் பகவன் தாஸை அருகே அழைத்து, நண்ப, "சபையைக்கலைத்துவிடு, சக்திசிம்மனுடன் நான் தனியே உரையாட விரும்புகிறேன். நான் எனது அந்தரங்க அறைக்குச் செல்லுகிறேன். அவனை அங்கு அழைத்து வரும்படிக் காவலனுக்குக் கூறிவிட்டு, உன் வேலைகளை கவனி, எனது முடிவுகளை இன்று இரவு உனக்குக் கூறுகிறேன். ராஜாமானசிம்மர் மாத்திரம் என்னை பகல் 4-மணிக்கு பார்க்கட்டும்," என்று கூறிவிட்டு, சிம்மாசனத்தைவிட்டு எழுந்து உள்ளே சென்றான்.

ஃ ஃ ஃ ஃ ஃ ஃ

அரண்மனையின் அந்தரங்க அறையில் பாதுஷாவும் ராஜாமானசிம்மனும் தனியே உட்கார்ந்து உரையாடிக், கொண்டிருந்தனர்,

அக்பர்:— நண்பனே! மீவாரமும் கடைசியில் நம்முடைய கையில்..............எல்லாம் ஆண்டவனுடைய கிருபை.

(தொடரும்.)



அருளாளன் துணை.

# A. N. காதர் அவுலியா பரிமளசாலை.

## வாசனை சாமான்கள் விபரம்.

கலவைச் சந்தனம், பாக்குத்தூள், சந்தாதித்தைலம், சிவகிரி புகையிலை, தாம்பூல மாத்திரை, சந்தன வில்லை, கூந்தல் தைலம், சாந்து டப்பி, அரகஜா, ஸ்நானபவுடர், கேசர் பவுடர், புனுகு, ஜவ்வாது, பொன்னாங்கனி தைலம் கஸ்தூரி தந்தப்பவுடர், பல தினுசு அத்தர் வகையறுக்கள்; தாரகம், ஆனந்தப்பவுடர், ஊதுபத்தி வகையறுக்கள், வீரியவிர்த்தி, சிட்டுக்குருவி லேகியம், வஸ்திரவாசனைக் கவர், ஆனந்தஞ்சனம், அஷ்டரசம், தேள்விஷ மூலிகை திராவகம், யாவும் எங்களிடம் விலை சரசமாய் கிடைக்கும்.

தாங்கள், விலாசம் தெரிவித்தால் மேற்கண்ட வாசனைசாமான்களின் முழுவிபரம் அடங்கிய கேட்லாக்கு, இனாமாக அனுப்புவோம்.

எங்கள் விலாசம்:— A. N. காதர் அவுலியா பரிமளசாலை,
வலங்கைமான், (தஞ்சைஜில்லா.)

குறிப்பு:—எங்கள் பரிமள சாலைக்கு (ஆண்டவன் பிரஸ்) என்று நாமம் சூட்டி அச்சுக்கூடம் ஏற்படுத்தி இருக்கிறோம் வெளியூர் அச்சுவேலைகளை குறித்த காலத்தில் அச்சிட்டு கொடுக்கப்படும்.

BLOCKS ENGRAVING



AND RUBBER STAMP.

அச்சாபீஸ்களுக்கும் புஸ்தகம் போடுகிறவர்களுக்கும் வேண்டிய பிளாக்குகள் அச்சாபீஸ் Type உயரத்திற்குச் சரியாக ஈயம் பிளேட்டில் எங்கிரேவிங்செய்து கட்டைகளுடனும், பித்தளையால் ஸோப் டைமுதலியவைகளும், மெடல் பவுண்டன்பேனா முதலியவைகளுக்கு பெயர்களும் (Name) போடப்படும். ரப்பர் ஸ்டாம்பு முதலியவை (Oil & Dry) கலர் (Boxes) பாக்ஸ்களும் ஸ்கூல்களுக்கு வேண்டிய வெள்ளை கலர் சாக் பென்ஸல்கள் (Slate) தட்டார வேலைக்கு வேண்டிய குவை முதலியவைகள் செய்து கொடுக்கப்படும்.

Apply to:-E. N. SANKARNARAYAN,
Block & Rubber Stamp Makers, Kumbakonam.

## பாலச்சந்திர பற்பொடி,

(சகல தந்தரோகங்களையும் நிவர்த்திக்கும்.)
இதற்கு சமானம் வேறு கிடையாதென்பது திண்ணம்.
ஒருமுறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.
கல்நார் கார்பாலிக் சேர்த்து நூதன முறையில் தயார் செய்யப்பட்டது
20 வருஷகாலமாய் பிரசித்தி பெற்றது.
பாலசந்திர டிப்போ, கும்பகோணம்.

மணம் மிகுந்தவை! குணம் நிறைந்தவை!!

# ஜெயலெக்ஷ்மி அண்டு கோ

அத்தர் வியாபாரம்,

பெரியகடைத்தெரு, கும்பகோணம்

முகிய கவ்னிப்பு.

இதனால் தெரிவித்துக்கொள்வது யாதெனில்:– எங்களால் தயாரிக்கப்படும் ஸாமான்கள் மற்றவர்களைப்போல் வீணை படாடோபமன்னியில் ராஜாங்க பண்டிதர்களால் கையாளப்பட்டுவந்த முறைகளில் சொல்லிப்படிக்குள்ள மூலிகை சரக்குகள் பூராவையும் சேர்த்து செய்பாகம் தவராது உயர்ந்த மாதிரியாக மணம், குணம், நலம், இம்மூன்றும் ஒற்றிருக்கும்படித் தயாரித்து நேயர்களுக்கு நன்மையைச் செய்து அதனால் நாங்கள் தக்க ஸர்டிபிகேட்டுகளும் பெற்றிருக்கிறோம். ஸ்ரீமான்கள் அன்புடன் நமது வாஸனைசாலைக்கு விஜயம் செய்து நேரில் பார்த்துக்கொண்டு தங்கள் சிநேகிதர்களுக்கும் நமது வாஸனைசாலையைப் பற்றி சிபார்சு செய்து நல்லாதரவு அளிக்கும்படி வேண்டுகிறோம்.

உயர்தர மாதப்பத்திரிகை!] உ [இரண்டாவது வருடம்!!

5000 சந்தாதாரர்கள்.

# கிராமானுகூலன்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்காக உண்மையாயும், தைரியத்துடனும் விசேஷ தியாகம்செய்து உழைத்துவருகிற

## ஸ்ரீமான் N. ஆபத்ஸகாய ஐயர், பத்திராதிபர்;

மிராசுதார்கள், விவசாயிகள், கிராம உத்தியோகஸ்தர்கள், ஆரம்ப ஆசிரியர்கள் பிராஞ்சு போஸ்டு மாஸ்டர்கள், ஐக்கிய நாணயச்சங்கங்கள், கிராம சுகாதாரம், லோகல் போர்டுகள், கிராமபுனருத்தாரணம் முதலிய விஷயங்களைப்பற்றி அநேக மேதாவிகளால் எழுதப்படும் அரிய விஷயங்களுடனும், தேசபக்தி புகட்டும் சிறந்த நாவல்களுடனும் வெளிவரும் ஓர் உயர்தர மாதப்பத்திரிகை. ஆங்கிலமாதச்சஞ்சிகைகளுக்கு சமானமாய் கிரௌன் 1-க்கு 4-அளவில் மிக உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. இதுபோன்ற தமிழ்மாதச்சஞ்சிகை வேறு கிடையாது. தமிழ்நாடெங்கும் புகழ்வாய்ந்த பத்திரிகை இதுவே!

கிராம உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகத் தவறமாட்டார்கள் என்று நம்பப்படுகிறது. தங்கள் சிநேகிதர்களுக்கும் சிபார்சு செய்து சந்தாதாரராகும்படி செய்யுங்கள்.

விளம்பரம் செய்வோர்களுக்கு ஏற்ற பத்திரிகை.

வருட சந்தா ரூ. 2—0—0 வெளிநாடுகளுக்கு ரூ 2—8—0

மானேஜர் :–"கிராமானுகூலன்,"

கும்பகோணம்.


Printed at the Sri Kali Press and Published by N. Apathsagaya Aiyar at Kumbakonam.